Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 224

ஞாயிற்றுக்கிழமை
07 ஜூலை 2024

ஆனி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



“நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பர் நடந்துவிடும் கண்டியளோ”



பெருந்தலைவர்

# இரா. சம்பந்தனுக்கு இன்று இறுதியஞ்சலி!

**திருகோணமலை, ஜூலை 7**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் இறுதி அஞ்சலியும், இறுதி ஊர்வலமும் இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளன.**

15

மன்னாரைச் சேர்ந்த

## முன்னாள் போராளி நேற்றிரவு மர்மச்சாவு



மன்னார், ஜூலை 7

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் பகுதியில் வசித்துவந்த முன்னாள் போராளியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

15

## சம்பந்தனை அஞ்சலிக்க போக்குவரத்து ஏற்பாடு!

கிளிநொச்சி, ஜூலை 7

சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் திருகோணமலையில் இன்று இடம்பெறவுள்ள நிலையில், நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக பொதுமக்

15

உரிய திகதியில்

## தேர்தல் நடக்குமாம்

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

உரிய திகதியில் தேர்தலை நடத்தவேண்டும் எனவும், அதைத் தேர்தல்கள் ஆணையாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் விளக்கியதாகவும் ஜனாதிபதி

15



குடும்பத்தகராறு காரணமாக

## பெண் படுகொலை கணவன் கைது!

கொழும்புத்துறையில் பயங்கரம்

10

## சம்பந்தர் தமிழரின் சகாப்தம்!

### நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 7

தமிழ்த் தேசியத்தின் பாதையில், தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரான இரா.சம்பந்தன் ஒரு சகாப்தம். அவரின் இராஜதந்திர நகர்வுகளையும், அனுபவ ரேகைகளையும் இழப்பதென்பது தமிழ்த் தேசியத்துக்கு ஈடிணையற்ற பின்னடைவே - என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்

15

ஊதிய உயர்வை வலியுறுத்தி

## அதிபர்கள், ஆசிரியர்கள் மீண்டும் போராட முடிவு!

கொழும்பு, ஜூலை 7

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க வலியுறுத்தியும், ரணில் - ராஜபக்ச அரசாங்கத்தின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் அதிபர்களும்,

15

## பொலிஸாருக்கு 'டிமிக்கி' வாளுடன் வாலிபர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 7

பல்வேறு வாள்வெட்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

10

## கிளிநொச்சியில் விபத்து: குடும்பஸ்தர் உயிரிழப்பு!



கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடமுருட்டிப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை நண்பகலில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்

15

## மருத்துவ அத்தியட்சகருக்கு இடையூறை ஏற்படுத்தாதீர்கள்!

சாவகச்சேரியில் நாளை போராட்டம், கடையடைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னேற்றத்துக்காகச் செயற்பட முனையும் மருத்துவ அத்தியட்சகருக்கு இடையூறையும் நிர்வாக அழுத்தத்தையும் வழங்கவேண்டாம் என்று வலியுறுத்தி சாவகச்சேரியில் நாளை பொது மக்களும் வர்த்தகர்களும் போராட்டத்திலும் கடையடைப்பிலும் ஈடுபடவுள்ளனர்.

15

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளையோரின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்காதீர்



## போராட்டத்தை கைவிடுமாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 7

**நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல், அவர்களின் காலத்தை வீணடிக்காமல், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களும் கடமைக்கு திரும்பவேண்டும் என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கல்விசாரா ஊழியர்கள் 65 நாட்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் முழு உயர்கல்வித்துறையும் முடங்கியுள்ளது. எதிர்காலத்தை பொறுப்பேற்கவிருக்கும் இளைஞர்களின் வாழ்க்கையை சீர்குலைத்து, அவர்களின் காலத்தை வீணடிப்பது தான் இதன் துயரமான பிரதிபலனாகும்.

கொரோனாதொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றால் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்கள், அந்தச் சவால்களையெல்லாம் எதிர்கொண்டு, பல்கலைக்கழகத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டநிலையில் இந்தப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் அவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

அவர்களின் கோரிக்கைகளுக்கான முன்னுரிமை 2025 வரவு -செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும். பணிக்கு சமுகமளிக்காத நாள்களை விடுமுறை நாள்களாகக் கருதி, தண்டனை ஏதுமின்றி பணிக்குத் திரும்புவதற்கான வாய்ப்பும் உள்ளது.

எனவே இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல் காலத்தை வீணடிக்காமல் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களும் பணிக்கு சமுகமளிக்கவேண்டும்- என்றார். (ச-125,26)

# அரச திணைக்களத்தினுள் உட்புகுந்து தாக்குதல்!

## மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

உரும்பிராயில் காணப்படும் உப பிரதேச சபை அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த இருவரை தாக்கிய குற்றச்சாட்டில் மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அரச திணைக்களம் ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்கிய குற்றத்துக்காக மூவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் லெனின் குமார் உத்தரவிட்டார். (ச-26)

# நடைமுறை பின்பற்றாமை; 10,000 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

சுகாதார விதிமுறைகளை மீறி உணவுப்பொருள்களைக் கையாண்டவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது உணவகமொன்றில் கையுறை, தொப்பி, முகக்கவசம் இன்றியும் மற்றும் மருத்துவச் சான்றிதழ் இன்றியும் உணவுப்பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக நபரொருவர் மீது பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இரண்டு குற்றங்களுக்காக 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ச-25,9)

# வீதிவிளக்கு பொருத்தல் மதிப்பீட்டைத் துரிதமாக்குக!

## மின்சாரசபைக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டத்தில் வீதி விளக்குகள் பொருத்தப்பட கோரப்பட்ட மதிப்பீட்டை துரிதப்படுத்துமாறு இலங்கை மின்சார சபைக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கும் இலங்கை மின்சார சபைக்கும் பழைய கொடுப்பனவு மிகுதியின் நிமித்தம் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகின்றபொழுது மதிப்பீட்டறிக்கை தாமதமாவதாகக் குறிப்பிட்டார்.

இதன்போது இலங்கை மின்சாரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி, 'இலங்கை மின்சாரசபை தேவையற்ற விதத்தில் சக்தி விரயமாவதனை தடுக்க முயற்சி செய்கின்றது.

இதேவேளை - பழைய கொடுப்பனவுகளும் நிலுவையில் உள்ளன. எம்மிடம் சரியான அமைவிடத்தை தெரிவிக்காது மதிப்பீட்டறிக்கைகள் கோரப்படுகின்றன.

யாழில் 15,736 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதற்கென மாதாந்தம் குறிக்கப்பட்ட செலவினம் ஏற்படுகின்றது. குறித்த செலவினத்தினை பிரதேச சபைக்கும் அறியப்படுத்துகின்றோம் - என்றார். (ச-125)



## மணல் கடத்தல்

# 4 டிப்பர்களுடன் நால்வர் கைது

கிளிநொச்சி, ஜூலை 7

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு பேர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனை நடவடிக்கைகளின்போது இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.

இதன்போது மணலகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 4 டிப்பர்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேகநபர்களையும் தடயப்பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம் .சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-25, 113)



# மந்திரிமனையில் கம்பிகள் மாயம்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

யாழ். மந்திரிமனையின் முன்பகுதியில் வைக்கப்பட்டிருந்த 20 கம்பிகள் மாயமாகியுள்ளன என்று தொல்லியல் திணைக்களத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் தமிழர் அரசு நிலவியதாக அடையாளப்படுத்தபடும் மந்திரிமனையின் முன்பகுதி இடிந்து விழும் சூழல் காணப்பட்டதையடுத்து அது வீழாத வண்ணம் கம்பிகள் மூலம் பலப்படுத்தப்பட்டிருந்தது. குறித்த கம்பிகளில் 20 கம்பிகள் மாயமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-25,125)

# 22 இந்திய மீனவர்கள்; விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 22 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களை நேற்றுமுன்தினம் மீளவும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் நளினி கந்தசாமி முன்னிலையில் மீண்டும் முற்படுத்தியபோது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ப-66)

# சா/ தர செயன்முறை பரீட்சை அடுத்தவாரம்

கொழும்பு, ஜூலை 7

2023 (2024) க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையின் அழகியல் பாடத்துடன் தொடர்புடைய செயன்முறைப் பரீட்சைகள் 9 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை நடைபெறும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதில் 169,007 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சொத்து விவரங்களில் எம்.பி.கள் தில்லுமுல்லு

**கொழும்பு, ஜூலை 7**

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகள், பொறுப்புகள் பற்றிய விவரங்கள் தொடர்பில் இம்முறை 69 உறுப்பினர்களே சமர்ப்பித்துள்ளதாகவும் 100 உறுப்பினர்கள் சமர்ப்பிக்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இலங்கை நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு ஆண்டும் தமது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பிக்கவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை ஆய்வுக்கு உட்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கும் சபாநாயகருக்கு உள்ளது.

எனினும் அந்தப் பணிகள் உரிய முறையில் செய்யப்படுவதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சம்பளம், கொடுப்பனவுகள் அடங்கலாக 3 முதல் 5 இலட்சம் வரை கிடைக்கப்பெறுகின்றது என்றும் சாதாரண உறுப்பினராகத் தெரிவாகும் ஒருவர் ஐந்து வருடங்களில் பல கோடிகளுக்கும், சொத்துகளுக்கும் அதிபதியாகிவிடுகிறார் என்றும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 7

இலங்கை மத்தியவங்கியின் உத்தியோகபூர்வ வெளிநாட்டுக் கையிருப்பு சொத்துகளின் அளவு 2024 ஜூன் மாதத்தில் 4.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது.

குறித்த அதிகரிப்பு 5.64 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. கடந்த மே மாதம் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகள் 5.41 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)



## தடைசெய்யப்பட்ட வில்பத்து பாதையை திறப்பதற்கு முயற்சி

கொழும்பு, ஜூலை 7

உயர்நீதிமன்றத்தால் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்ட வில்பத்து பாதையை முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் இணைந்து தமது அரசியல் இலாபத்துக்காக திறப்பதற்கு முயற்சிப்பதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

2009 வரை வில்பத்து காடு தடை செய்யப்பட்ட பிரதேசமாக இருந்தது. 2009இல் போர் முடிவடைந்ததும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் பதவிக்காலத்தில் மன்னாரையும் புத்தளத்தையும் இணைக்கும் இந்த வீதி அமைக்கப்பட்டது.

இந்த வீதியால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக கூறி உயர்நீதிமன்றம் இந்த வீதியூடான போக்குவரத்தை தடை செய்தது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் 300 ஆதரவாளர்களுடன் மன்னாரிலிருந்தும் புத்தளத்திலிருந்தும் இன்று 7 ஆம் திகதி இரு பஸ்களில் குழுக்களாக புறப்பட்டு இரு குழுக்களும் எழுவான் குளத்தில் சந்திக்கவுள்ளன. இதற்கு இலங்கைப் போக்குவரத்து சபையும் இவர்களுக்கு பஸ்களை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட வீதியூடாக பிரயாணம் செய்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச்சபை எவ்வாறு அனுமதி வழங்கலாம் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமது வாக்கு வங்கியை பலப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் செயற்பாட்டில் அவர்கள் இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

## சு.க.வில் தயாசிறி மைத்திரி இணக்கம்



கொழும்பு, ஜூலை 7

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி தரப்பும் இணைந்து செயற்படுவதற்கு இணக்கத்துக்கு வந்துள்ளன என்று தெரியவருகின்றது.

தயாசிறி ஜயசேகரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது.

அதனையடுத்து தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கட்சியின் தலைமையகத்தில் குழப்பத்தின் மத்தியில் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில் தயாசிறி ஜயசேகரவுக்கு முன்னாள் ஜனாதிபதியும் சு.க.வின் முன்னாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன், ஒன்றாக பயணிப்பதற்கான அழைப்பையும் விடுத்துள்ளார். எனினும், தயாசிறி ஜயசேகரவை கட்சியிலிருந்து இடைநிறுத்தும் முடிவிலேயே சுதந்திரக்கட்சியின் நிமால் தரப்பு உள்ளது.

இந்தப் பின்புலத்திலேயே தயாசிறிக்கு மைத்திரி பச்சைக்கொடி காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-25-44)

## பலஸ்தீனத்துக்கு ஆதரவளிப்போம்

### சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

இஸ்ரேலின் அரச பயங்கரவாதம் மற்றும் பலஸ்தீன மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதொன்று. பலஸ்தீன மக்களுடன் இணைந்து நிற்போம்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த மனிதாபிமானமற்ற தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவிடம் கூற விரும்புகின்றோம். இந்த வருட இறுதிக்குள் இலங்கை பலஸ்தீன மக்களுடன் இரட்டைப் பேச்சு இல்லாமல் ஒன்றாக நிற்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வெடிமருந்துடன் ஒருவர் கைது



கொழும்பு, ஜூலை 7

கண்டி, மொரயாய பகுதியில் வெடிபொருள்களுடன் சந்தேகநபரொருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் 39 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 2 கிலோகிராம் அம்மோனியம் நைட்ரேட்டு மற்றும் 8 டெட்டனேட்டர் குச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை ஹசலக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## கதிர்காமக் கந்தன் பெருவிழா ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 7

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தனின் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி இறுதிப் பெருவிழா நடைபெறவுள்ளது. பின்னர் 22 ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவடையும்.

திருவிழாக் காலங்களில் கதிர்காமத்துக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து பொது வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பக்தர்களின் பாதுகாப்புக்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான எல்லே போட்டி, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இறுதிப் போட்டியில், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயப் பெண்கள் அணி வெற்றி பெற்று, தொடர்ச்சியாக 8 ஆவது தடவை சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-9)

## கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் அங்கவீனமுற்றோருக்கான கொடுப்பனவு பெறுவோருக்குரிய ஜூலை மாதக் கொடுப்பனவு தென்மராட்சி பிரதேச செயலக சமூகசேவைகள் அலகினால் நேற்றுமுன்தினம் தொடக்கம் பிரதேச அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளை ஜூலை 17 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாமென அஞ்சல் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-9)

## நூல் அறிமுகம்

யாழ்., ஜூலை 7
தமிழில் எழுதப்பட்டு, இலக்கிய விமர்சகரும், மொழிபெயர்ப்பாளருமாகிய மறைந்த ஏ.ஜே.கனகரட்ணவால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட 40 சிறுகதைகளின் மொழிபெயர்ப்புத் தொகுப்பாக வெளிவந்திருக்கும் 'The Sri Lankan Tamil Literary Landscape' என்ற நூலின் அறிமுக நிகழ்வு, இலக்கம்.92, கண்டி வீதியில் (பஸ்டியன் ஹோட்டல் எதிரில்) அமைந்திருக்கும் கலம் அமைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
ம.நிலாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பதிப்பாளர் உரையை எம். பௌசரும், மூலச் சிறுகதைகளிலிருந்து ஒரு பகுதியை சோகினா கிருபாகரனும், அதனுடைய மொழிபெயர்ப்பை ஜெயக்குமார் ஜாதுசனும்வழங்குவர். தொடர்ந்து, நூல் அறிமுக உரைகளை கலாநிதி பாக்கியநாதன் அகிலன் மற்றும் கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் ஆகியோர் ஆற்றுவர்.
நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ப)

## தீட்சை வழங்கல்

மன்னார், ஜூலை 7
திருவாசக விழாவுக்கு முன்னோடியாக சமய தீட்சை வழங்கும் நிகழ்வு, திருக்கேதீச்சரம் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள திருவாசக மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

## தான்தோன்றீஸ்வரர் மஹோற்சவம்

முல்லைத்தீவு, ஜூலை 7
ஒட்டுசுட்டான் தான்தோன்றிவேகாவனேஸ்வரர் ஆலய மஹோற்சவம், நேற்றுச் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து 16 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத்திருவிழாவும், 20 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப)

## இணையவழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 7
நெடுந்தீவு ஊரும் உறவும் நிறுவனத்தின் ஏற்பாட்டில், நெடுந்தீவின் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்ட முன்வரைபு தொடர்பான கலந்துரையாடல், இணையவழியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கலந்துரையாடலில் அபிவிருத்தி ஆய்வாளர் கலாநிதி வை.ஜெயமுருகன் வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார். கலந்துகொள்ள ஆர்வமுள்ளோர் ZOOM ID: 811127 28524, PASSWORD: 7777 ஊடாக இணைந்து கொள்ளமுடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ப-66)

## மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 7
சைவபரிபாலன சபை ஏற்பாடு செய்த, மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு, யாழ்ப்பாணம், நீராவியடியில் அமைந்துள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பிரதி அதிபர் சபாரட்ணம் யசோதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

## அறநெறி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
பாண்டவட்டை, வறுத்தோலை மற்றும் காட்டுப்புலம் ஆகிய கிராமமக்களின் நன்மை கருதி, வடக்கு மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால், வீர காளியம்மன் அறநெறிப் பாடசாலை மன்றத்தலைவர் உமாபதியின் தலைமையில் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அறநெறி வகுப்புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.
நிகழ்வில் இந்து சமயத் திணைக்கள கலாசார உத்தியோகத்தர், அந்தப்பிரதேச கிராமசேவையாளர் இராஜ்கண்ணா, பாடசாலையின் அதிபர் த.துஷ்யந்தன், மூளாய் கிராம சேவையாளர் சிவரூபன், கணிதபாட ஆசிரியர் சிவானந்தன், தந்தை செல்வா நற்பணி மன்ற பொதுச் செயலாளர்களான எஸ்.கே.தளையரட்ணம்,ஸ்ரீஜீவா, அறநெறிப் பாடசாலை ஆசிரியை தவஆனந்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால்சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரம் வழக்கம்போல் இருக்கும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் சகவியாபாரிகளின் போட்டிகளை முறியடித்து விற்பனையைப் பெருக்குவீர்கள்.

**கன்னி:** தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யநேரிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். கடன்கள் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிந்தித்துச் செயற்படவும். சிவபெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறைகள் திறப்பு விழா



யாழ்ப்பாணம், ஜூலை 7
உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் புனரமைக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு வகுப்பறைத் திறப்புவிழா, அதிபர் க.உமாபாலன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.என்.சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் வே.சிவகரன் தம்பதிகள், கௌரவ விருந்தினராக உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி யோ.தனலக்ஷ்மி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-159)



சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியை திருமதி இரத்தினாவதிஅம்மா செல்லத்துரையின் குடும்பத்தினரால், வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு முற்றம் கடந்த புதன்கிழமை அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (ப-9)



'வாழ்க்கை தொடர்பான சரியான தீர்மானமெடுத்தல்' எனும் தொனிப்பொருளில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயிலும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கோப்பாய்ப் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)



முல்லைத்தீவு - தண்ணிரூற்று சத்திய சாயி சேவா நிலைய நிர்வாகமும் ,அதன் மனித மேம்பாடு கல்விமாணவர்களும் இணைந்து முல்லைத்தீவு பொது மருத்துவமனை வளாகத்தில் கடந்த சனிக்கிழமை சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (ச-22-13)



நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில், இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் அண்மையில் இடம்பெற்றது.
நீரிழிவுப் பரிசோதனை முகாமை யாழ்.பிராந்திய இலங்கை போக்குவரத்துச்சபை முகாமையாளர் க.கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.
நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல் மற்றும் நீரிழிவுக் கழக அங்கத்தவர்கள், சித்த வைத்தியர்கள் மற்றும் யாழ்.மாநகரசபை அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ப)



கிளிநொச்சி தெற்கு வலய தமிழ்மொழித்தின எழுத்தாக்கப் போட்டியில் பிரிவு - 5 இல், கவிதை ஆக்கத்தில், முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவி சார்ள்ஸ் அபிசாயினி முதலிடம் பெற்று, மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளார். இதேவேளை - பிரிவு- 5 சிறுகதையாக்கத்தில் மேற்படி பாடசாலை மாணவி நந்தகோபாலன் நிலோஜினி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ப-13)

# உலக உணவுத்திட்டப் பிரதிநிதி கிளிநொச்சிக்கு களப்பயணம்

கிளிநொச்சி, ஜூலை7
உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்துர் ரஹீம் சித்திக், கிளிநொச்சி மாவட்டத்துக்கு அண்மையில் வருகை தந்திருந்தார். கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரனை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். பின்னர் உலக உணவுத்திட்டத்தால், பாடசாலைகளுக்கு வழங்கப்படும் உணவுகளுக்கான மரக்கறிகளைப் பெறுகின்ற தோட்டத்தைப் பார்வையிட்டார். (ப-113)





# பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி , ஜூலை 7
ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் வடக்கு மாகாணத்தில் கிறிசலிஸ் நிறுவனத்தால் 'பால் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான முறைப்பாடு முறைமைகள், அடையாளப்படுத்தப்பட்ட சேவை வழங்குநர் மற்றும் மாவட்ட பரிந்துரை வலையமைப்பு' எனும் தலைப்பில் ஒருநாள் பயிற்சிப்பட்டறை கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. பயிற்சிப்பட்டறையை கிளி. மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் ஆரம்பித்து வைத்தார். (ச-22,13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணமோசடி பெண் கைது



வெளிநாட்டுக்கு அனுப்புவதாகப் பலரை ஏமாற்றி பணமோசடி செய்த பெண் ஒருவரை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேடபுலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றினை முன்னெடுத்து வந்த பெண் உரிமையாளர் ஒருவரே கைதுசெய்யப் பட்டுள்ளார்.

டுபாய் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி, சுமார் 40 இலட்சம் ரூபாவை அவர் பணமோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது. (ச-இ)


## மணமகன் தேவை

1997, இந்து, கேட்டை, **BUSINESS DEVELOPPER, Jaffna.** மணமகள் பதிவு இல: 10751. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.

www.EQMarriageService.com

இணையவழி திருமணசேவை

கொழும்பு - 04

அழையுங்கள் 076 664 9401

## வாடகைக்கு

சண்டிலிப்பாய் பகுதியில் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில், விசாலமான வரவேற்பறை, 4 அறைகள், 2 குளியலறை மற்றும் சமையலறை வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

**அலுவலக பாவனைக்கு உகந்தது**

**48/15, வாத்தியார் இல்லம் கல்வளை, சண்டிலிப்பாய்.**

தொடர்புகளுக்கு:

076 024 0378, 077 986 9643, 077 356 3192




## மணமகள் தேவை

பிரித்தானியாவில் பிறந்து நிரந்தர வதிவிட உரிமை கொண்ட 29 வயதான இந்து (V) குலத்தைச் சேர்ந்த மணமகனுக்கு பட்டப் படிப்பை நிறைவு செய்த ஆங்கிலத்தில் நன்கு புலமை கொண்ட மணமகள் தேவை.

**புனர்பூசம், 3ம் பாதம்.**

**குறிப்பு** : தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

**தகவல்** : த.பாலகுமார் (தந்தை)

(புன்னாலைக்கட்டுவனை பூர்வீகமாக கொண்ட இவர் யாழ்ப்பாணம், திருகோணமலை, UK இல் தொழில் ஸ்தாபனங்களை நடாத்தி வருகிறார்.)

(cs 55615) (N-I)

தொடர்புகளுக்கு

வட்ஸ்சப் : +44 795 612 3456


## கண்ணீர் அஞ்சலி

### கதிரவேல் சரஸ்வதி (சரசு)

**(வாரிவளவு காரைநகர்)**



தோற்றம் 23.01.1955 மறைவு 04.07.2024

அவர்களின் மறைவு எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர் கருங்காலி போசுட்டி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**


**தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**077 539 6472**

(CS/55618) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 05 . 1950



மறைவு 04 . 07 . 2024

### செல்லையா லோகநாதன்

**(சபரி நதி ரயர் கடை உரிமையாளர்)**

அங்களப்பாய், இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா லோகநாதன் (சபரி நதி ரயர்க்கடை உரிமையாளர்) கடந்த 04.07.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சீனிக்குட்டி (இளையபிள்ளை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும் செந்தூரன் (லண்டன்), அனுஷா, அமுதினி (லண்டன்), கோகிலன், ராகுலன், வாசுதேவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்ஷினி (லண்டன்), சதீஸ்குமார், மகேந்திரராசா (லண்டன்), மயூரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வரத்தினம், மனோன்மணி, சண்முகநாதன் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கண்மணி, வேலாயுதபிள்ளை, சுப்பிரமணியம், நாகராசா, கிருஷ்ணபிள்ளை, தர்மலிங்கம் மற்றும் இராசரத்தினம், பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், நாகையா, யோகநாதன் மற்றும் நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹம்ஷவர்ஷனி, கௌசிகா, ஜெசிகா, திலீபன் ஆகியோரின் அன்பு மிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்**

**077 707 2106**

**அங்களப்பாய்,**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**

(CS/887) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1945



மறைவு 06 . 07 . 2024

### திருமதி விக்னேஸ்வரி குழந்தைவேலு

**(முன்னாள் பிரதி அதிபர் (யா/கொக்குவில் பெரியபுலம் மகாவித்தியாலயம்)**

உடுவிலை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தமிழ் பேராசான் நாகலிங்கம் குழந்தைவேலுவின் துணைவியார் விக்னேஸ்வரி நேற்று (06.07.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலம் சென்றவர்களான கதிரமலை, செல்வரத்தினம் மற்றும் தியாகராஜா (பிரான்ஸ்), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சரத்சந்திரா (பிரதேச செயலகம் யாழப்பாணம்), அமரர் சத்தியேந்திரா மற்றும் சமுத்திரிக்கா (கனடா) ஆகியோரின் தாயாரும், செல்வரஞ்சினி (உடுவில்), கௌசிகன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், அஸ்மிதா, தீப்திகா, யானுசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**நாகலிங்கம் குழந்தைவேலு (கணவர்)**

**021 222 5662**

**63/2 கே.கே.எஸ் வீதி,**
**கொக்குவில்.**

(CS 888) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கடற்போக்குவரத்தில் அசமந்தம் வேண்டாம்

யாழ்ப்பாணத்துக்கும் தீவகங்களுக்கும் இடையிலான கடற்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் படகுகளில் பெரும்பாலானவை உரிய தரநிர்ணயங்கள் இல்லாமலேயே சேவையில் ஈடுபடுகின்றன என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது, படகு மூழ்கியதால் பயணி ஒருவர் அண்மையில் உயிரிழந்த விடயம் தொடர்பில் சபையின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு அது தொடர்பில் விவாதிக்கப்பட்டபோதே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சற்றும் குறைவில்லாத வரலாற்று நீட்சியுடையது தீவகத்தின் போக்குவரத்துப் பிரச்சினை. இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலும், தீவகத்தின் போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கப்படுமா என்பது இப்போது சந்தேகத்துக்குரிய விடயமே. போக்குவரத்துச் சீரின்மை காரணமாக தீவகம் தனிமைப்படுத்தப்பட்ட - சபிக்கப்பட்ட பிரதேசமாகிப் பல தசாப்தங்கள். தீவகத்துக்கான போக்குவரத்து மார்க்கங்களைப் புதுப்பியுங்கள் - பலப்படுத்துங்கள் என்று ஒவ்வொரு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களின்போதும், இதர கலந்துரையாடல்களின்போதும் பொதுமக்களாலும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களாலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்றபோதிலும், அந்தக் கோரிக்கைகளெல்லாம் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்காகவே பிரதிபலிக்கின்றன. இந்தவாரம், அடுத்தவாரம் என காலங்கள் இழுத்தடிக்கப்படுவதும், வழங்கப்படும் மாற்று ஏற்பாடுகள் பயனற்று இடையில் நிற்பதும்தான் தீவகப் போக்குவரத்தில் இதுவரை நாம் கண்டதும் கேட்டதும்.

பொதுப்போக்குவரத்துக்கட்டமைப்பில் மிகப்பிரதானமானவை, வான்போக்குவரத்தும்கடற்போக்குவரத்தும் என்பர். இவ்விரு போக்குவரத்து மார்க்கங்களில் ஏற்படும் சிறு தவறுகள்கூட அத்தனை பேருக்கும் எமனாக வந்து முடியலாம். இதனால்தான், கடற்போக்குவரத்தும், வான் போக்குவரத்தும் மிகப்பிரதானமான போக்குவரத்து மூலங்களாக உலகளவில் அடையாளப்படுத்தப்படுகின்றன. அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற சம்பவமொன்றை இங்கு குறிப்பிடுதல் சாலப்பொருத்தமாக அமையும். இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வரவிருந்த ஒரு விமானம் புறப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர், விமானத்தில் சிறு தவறு இருப்பதை விமானி கண்டுகொண்டார். இதையடுத்து அவர் விமானத்தை இயக்க மறுத்துவிட்டார். அந்தத் தவறு நிவர்திக்கப்படும் வரைக்கும் அத்தனை பயணிகளும் விமான நிறுவனத்தின் செலவில், விடுதியொன்றில் தங்கவைக்கப்பட்டு அடுத்தடுத்த நாள்களே இலங்கைக்குத் திரும்பினார்கள். இந்தத் தீவிரத்தன்மைக்குச் சற்றும் குறைவில்லாததுதான் தீவகத்துக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து.

ஒரு பிரதேசம் வளர்ச்சியடைய வேண்டுமாயின், அந்தப்பிரதேசத்தின் உட்கட்டமைப்புப் பலப்படுத்தப்பட வேண்டும். அவற்றில் பிரதானமானது போக்குவரத்து. தீவக மக்களின் பொருளாதாரம் உயர்த்தப்படும், தீவகம் அபிவிருத்தி செய்யப்படும் என்றெல்லாம் வாயால் வீராப்புக் காட்டும் அரசாங்கம், கடற்பலிகளைத் தவிர்த்து மக்கள் ஆரோக்கியமான நிலையிலும், திறன்பட்ட ரீதியிலும் போக்குவரத்துகளை மேற்கொள்ள உரிய வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும். தீவகத்தில் 40க்கும் மேற்பட்டவர்கள் குடிசைத் தொழில்நடவடிக்கை போன்று படகுச் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு நிதி மூலங்களை வழங்கி, அவர்களின் படகுகளை மேம்படுத்துவது தொடர்பில் இந்த அரசாங்கம் பிரதானமாகச் சிந்திக்க வேண்டும் என்று தீவகத்துக்கான போக்குவரத்து, மிக இலகுவான அணுகல் தன்மையுடன் நிறைவேற்றப்படக் கூடியதாக மாற்றம் பெறுகின்றதோ அன்றுதான் தீவகத்தினதும், யாழ். குடாவினதும் பொருளாதாரம் வளப்படும் - பலப்படும்.




# ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு 2025 இல் தடையில்லை



## இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

**அடுத்த ஆண்டு முதல் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்கள், இலங்கை துறைமுகங்களுக்கு வருவதை தடைசெய்யமாட்டோம் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

ஜப்பானின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார். கடந்த ஜனவரி மாதம் முதல், ஒரு வருடத்துக்கு வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்கள், தமது துறைமுகங்களுக்கு வருவதை இலங்கை அரசாங்கம் தடை செய்தது. 2022 இல் சீன கண்காணிப்புக் கப்பலின் இலங்கைத் துறைமுக அழைப்புத் தொடர்பில் அண்டை நாடான இந்தியா அதிருப்தியைக் காட்டிய பின்னர் இந்த தடை நடைமுறைக்கு வந்தது. இந்த நிலையில், தமது அரசாங்கம் வெவ்வேறு நாடுகளுக்கு வெவ்வேறு விதிகளை வைத்திருக்க முடியாது என்றும் சீனாவை மட்டும் தடுக்கமுடியாது. இலங்கையில் பயன்படுத்தப்படாத கடல் வளங்களுக்கு ஆராய்ச்சி மிகவும் அவசியமானது. மற்றவர்களுக்கு இடையே ஏற்படும் சர்ச்சையில் தனது நாடு பக்கச்சார்பாக இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அலிசப்ரி சிங்கப்பூர் பயணம்

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனின் அழைப்பின் பேரில், அவர் இந்தப் பயணத்தை முன்னெடுக்கிறார்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சிங்கப்பூர் அமைச்சருடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இரு தரப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் என்றும் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான ஆசிய- பசுபிக் உச்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பேக்கரி உற்பத்தி விலை குறையாது

பாண் மற்றும் பேக்கரி உற்பத்தி உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கமுடியாது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தலைவர்என்.கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். மூலப்பொருட்களின் விலை அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். எரிவாயு விலையை குறைப்பதால் மட்டுமே, பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளைக் குறைக்கமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-66)

# கோழி இறைச்சி விலை குறையும்

கொழும்பு, ஜூலை 7

இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தி அதிகரித்துள்ளமையால் கோழி இறைச்சியின் விலை வேகமாக குறையும் சாத்தியம் காணப்படுகிறது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் கோழி இறைச்சியின் அதிகூடிய உற்பத்தி இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் பதிவாகியுள்ளது. (ச-இ)

# வெளிநாட்டுக்கடனை நிர்வகிக்க நிறுவனம்

கொழும்பு. ஜூலை 7

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடன்களை நிர்வகிப்பதற்குபுதியநிறுவனமொன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடன் மேலாண்மை சட்டத்தின் கீழ் இந்த நிறுவனம் நிறுவப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐம்பது பெரிய அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காக விரைவில் ஒரு புதிய சட்டம் உருவாக்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ச-இ)

## நாளை

08.07.2024

திங்கட்கிழமை - ஆனி - 24

சுபநேரம் : 11.58 - 01.28

ராகுகாலம் : 07.28 - 08.58

## நாளொரு நல்வார்த்தை

**கல்வியின் பயன் எதையும் கோபப் படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும்.**

- றொபேர்ட் பிராஸ்ட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 3 போட்டிகளில் வென்று அக்கராயன் ம. வி . வாகை

கிளிநொச்சி, ஜுலை 7

அக்கராயன் மகா வித்தியாலயத்தின், மென்பந்து, எல்லே, கைப்பந்து ஆகிய அணிகள் கிளிநொச்சி தெற்கு வலயத்தில் வெற்றிகளைப் பெற்று, மாகாணப் போட்டிக்ளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அணிகள் வலய மட்டத்தில் மென்பந்து மற்றும் கைப்பந்துப் போட்டியில் முதலாமிடத்தையும் எல்லேப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

(ப-13)


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் AC திருத்தும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

**வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் இணைந்து கொள்ள முடியும்.**

தொடர்பு: **070 499 4995**

## விற்பனைக்கு உண்டு

பாவித்த நல்ல நிலையில் உள்ள Glass door, Tempered glass, Normal glass, Boxbar, மாபிள்சிங், Cladding Board மற்றும் Gypsum Ceiling என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : **077 959 2628**

## விற்பனைக்கு

யாழ் பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 3 பரப்பும், மாடி வீடும்.

யாழ் பெருமாள் கோவிலுக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

**077 723 2535**

## கொழும்பு - வெள்ளவத்தையில்

இரண்டு வீடுகள்
அபாட்மென்ட்டில்
முழு தளபாடங்களுடன் (Fully Furnished, குளிரூட்டப்பட்ட சொகுசு மற்றும் குளிரூட்டப்படாதது)
**நாளாந்த / மாதாந்த**
வாடகைக்கு உண்டு.

077 7111599 / 077 8993871 076 2788412

## காணி விற்பனைக்கு

கெருடாவில் வடக்கு, வடமராட்சியில் அமைந்துள்ள 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(CS/55620) N-1

**074 345 8885**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் இணைந்த குளியலறை, நான்கு அறைகளைக்கொண்ட புதிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

(CS/55619) N-1

**077 403 9786**

## மணமகன் தேவை

1995, இந்து, பூரம், **DOCTOR, Jaffna.**
மணமகள் பதிவு இல: 10663.
தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு - 04

அழையுங்கள் **076 664 9401**

## பராமரிப்பாளர் தேவை
## கொழும்பு - யாழ்ப்பாணம்

முதியோர் இல்லத்திற்கு பராமரிப்பாளர் தேவை.
ஆண் / பெண் வயது 20 - 55
சம்பளம் தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

077 712 6859 / 60, 076 007 7776


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி சரோஜினிதேவி



தோற்றம் 19.02.1958 — மறைவு 05.07.2024

போயிட்டியைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி கிளானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரேஜினிதேவி கந்தசாமி அவர்கள் கடந்த 05.07.2024 வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் கந்தசாமி அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சானைக்குட்டி - பானுமதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஜெயந்தினி, சிவறாம், சுதர்சன், லசிந்தா, லோபனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கம்சிகா, நிரூசன், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியும், கபிஸ், சயானிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அமரர் தனபாலசிங்கம் (ராசன்), ஜெயபாலசிங்கம், தவபாலசிங்கம், ரஞ்சினிதேவி, குணபாலசிங்கம், அமரர்களான விஜயபாலசிங்கம், யோகபாலசிங்கம் மற்றும் மாலினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர் சிவராசா, இராசம்மா, தர்மலிங்கம், விஜயகுமாரி, இராசரத்தினம், இராஜேஸ்வரி, அமரர் இராசமணி, தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.07.2024) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**சுதன் (மகன்) 070 6119 292**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1932



மறைவு 06 . 07 . 2024

### செல்லப்பா சுப்பிரமணியம்

கட்டுவனை பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் நேற்று (06.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-தெய்வானை தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான விஜயசுந்தரம், வேலாயுதம் புவனேஸ்வரி, நாகரத்தினம், செல்லமுத்து, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயச்சந்திரனின் ஒன்றவிட்ட சகோதரனும் பிரகாஷ், அபிராவின் அன்பு தாத்தாவும் ஜெயந்தியின் (ஜெயா), சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் தற்காலிக இல்லத்தில் (மல்லாகம்) இடம் பெற்று மல்லாகம்இந்து மயாணத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நீதிமன்ற வீதி
மல்லாகம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**(ஜெயாபெறாமகள்) ஜெயந்தி-**
**076 648 7632**

(CS 894) V-1

## மரண அறிவித்தல்

### பாலசுப்புரமணியம் விமலாதேவி



பிறப்பு 20.07.1961 — இறப்பு 06.07.2024

நல்லூரை வசிப்பிடமாக கொண்ட பாலசுப்புரமணியம் விமலாதேவி நேற்று (06.07.2024) சனிக்கிழமை இறை பதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

393/23, கோயில் வீதி, நல்லூர்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777 110 958,**
**0776 458 739.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம்

யாழ்ப்பாணம், ஜுலை 7

102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவுக் கொடி ஏற்றி கூட்டுறவுக் கீதம் இசைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. சங்கத் தலைவர் ம.ஜெ.சுஜிந்திரன் கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்வில் சங்கப் பணியாளர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (25-17)



## நல்லூரில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜுலை 7

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர்த் தொகுதிக்கிளை அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, நல்லூர்த் தொகுதிகிளை பணிமனையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நல்லூர்த் தொகுதிக் கிளையின் தலைவரும் வடக்கு மாகாணசபை அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நல்லூர்த் தொகுதிக்கிளையின் செயலாளர் இ.இராஜதேவன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-20)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுலை 7

கிராம மட்ட உணவுப் பாதுகாப்பு, போஷாக்கு மற்றும் டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல், அரியாலை, நாவலடி ஆரம்ப சுகாதார நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் ஜே/90, அரியாலை கிழக்கு மற்றும் ஜே/89, அரியாலை தென்கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ப-66)



### கோரிக்கைக்கு செவிசாயுங்கள்

# கறுப்பு உடையணிந்து வவு.வில் போர்க்கொடி



கொழும்பு, ஜுலை 7

**வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கறுப்பு உடையணிந்து கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று சனிக்கிழமை ஈடுபட்டுள்ளனர்.**

துணை வேந்தர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எவ்வித தகவல்களையும் தமது சார்பில் வெளியிடவில்லை என்பதை கண்டித்தும் இந்தக் கறுப்புக்கொடிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



## இரா.சம்பந்தனுக்கு அஞ்சலி நிகழ்வு

கிளிநொச்சி, ஜுலை 7

மறைந்த இரா.சம்பந்தனின் நினைவு அஞ்சலி நிகழ்வு, வட்டக்கச்சி பொதுச்சந்தை முன்பாக நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மோட்டார் சைக்கிளில் ஆசையாக இருந்தது!

### திருடிச் சென்ற நபர் பொலிஸ் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஜுலை 7

'மோட்டார் சைக்கிளைப் பார்க்க ஆசையாக இருந்தது. அதனால், திருடிச் சென்றேன்' என யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டுக் குற்றத்தில் கைதான இளைஞர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளொன்று திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 24 வயதான இளைஞர் ஒருவரை சாவகச்சேரி பகுதியில் வைத்துக் கைது செய்தனர். திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும், ஒரு கிராம் 30 மில்லிகிராம் அளவிலான ஹெரோய்னும் சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்டது. இதையடுத்து அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையின்போதே, மோட்டார்சைக்கிளைப் பார்க்க ஆசையாக இருந்ததாகவும், அதனால் அதைத் திருடிச் சென்றதாகவும் அவர் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

கைதான சந்தேகநபரை விசாரணைகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ம-20-26-66)

### பொலிஸாருக்கு...

பல்வேறு வழக்குகளில் தேடப்பட்ட குறித்த நபர், வெவ்வேறு இடங்களில் தலைமறைவாக இருந்த நிலையில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் தனது தாயார் வீட்டுக்கு வந்திறங்கிய சில நிமிடங்களில் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மருதங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேகநபர் நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் எனவும், அவரிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(அ-ம-66)

### பெண்...

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறைப் பகுதியில், பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

றஞ்சன் டிசாயினி (வயது - 29) என்ற பெண்ணே இவ்வாறு கொலையுண்டவராவார். கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறே கொலைக்குக் காரணம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-26-125)

மருதனார்மடத்தில்

# இளைஞர் மீது மூர்க்கத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜுலை 7

மருதனார்மடம் சந்தைப் பகுதியில், நேற்று இரவு இளைஞர் ஒருவர் மீது மூர்க்கத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இளைஞர்கள் சிலரும் சுன்னாகம் பொலிஸாரும் இணைந்தே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்று சம்பவ இடத்தில் நின்றிருந்த பொதுமக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

சந்தைக்குள்ளிருந்து மோட்டார்சைக்கிளில் வந்த அந்த இளைஞர், வாகனமொன்றுடன் மோத முற்பட்டு சுதாகரித்துள்ளார். இதையடுத்து, வாகனத்துக்குள் இருந்து இறங்கிய நபர்கள் அந்த இளைஞர் மீது தீவிரமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த சுன்னாகம் பொலிஸாரும் அந்த இளைஞர் மீது மிலேச்சதனமாக தாக்குலை நடத்தியுள்ளனர். டைப், வயர்களால் குருதிக் காயம் ஏற்படும் அளவுக்குத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது.

இதையடுத்து அந்த இளைஞர் பொது மக்களால் மீட்கப்பட்டு அம்புலன்ஸ் வாகனத்தில் தெல்லிப்பழை மருத்துவ மனையை நோக்கி அனுப்பிவைக்கப்பட்டார்.

ABV 1514 இலக்க ஓட்டோவில் வந்த பொலிஸாரே இவ்வாறு மூர்க்கத்தன மாகத் தாக்குதலை நடத்தினார்கள் என்று பொதுமக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு நேற்று இரவு இது தொடர்பில் அழைப்பெடுத்து வினவியபோது, சம்பவம் தொடர்பாக இது வரை தனக்கு முறையிடப்படவில்லை என்று தெரிவித்தார். பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை மேலதிக தகவல்கள் வெளிவரவில்லை. (அ-ம-125-26)

# கட்டார் விமானசேவை அதிகரிப்பு

கொழும்பு, ஜுலை 7

இலங்கை - கட்டார் தலைநகர் டோகாவுக்கு இடையிலான விமான சேவைகளின் எண்ணிக்கையை கட்டார் ஏர்வேஸ் அதிகரிக்க தீர்மானித்துள்ளது. அதற்கமைய, தினசரி 5 முறை இயக்கப்படும் குறித்த விமான சேவைகள் ஆறாக அதிகரிக்கப்படவுள்ளன.

இந்த நடைமுறை இந்த மாதம் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

சாவகச்சேரி பொதுமருத்துவமனை

# மருத்துவர் அர்ச்சுனவை தாக்கியோருக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 7

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் பொறுப்பு மருத்துவர் அர்ச்சுன மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படும் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பி.எஸ்.டி.பத்திரன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில், நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்க மருத்துவர்கள் சிலர் புதிதாகப் பதவியேற்ற பொறுப்பு மருத்துவர் அர்ச்சன மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் திணைக்கள ரீதியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?" என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்குப் பதிலளித்த வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பி.எஸ்.டி.பத்திரன, மருத்துவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால், அவ்வாறு தாக்குதல் நடத்தியவர்கள் மீது பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் குறித்த மருத்துவ அதிகாரி சரியான நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் திட்டமிடலின்றி நடவடிக்கைகளை முன்னெடுத்தமையே அவர் மீது எழுந்த குற்றச்சாட்டுக்குக் காரணம். இதேவேளை - தற்காலிகமாக விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த மருத்துவரை தமது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் பணியாற்றுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (ம-125-27-26)

# தமிழரின் வேணவாக்களை மிதமாகக் கையாண்டவர்

### யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இரா.சம்பந்தனுக்கு இரங்கல்


ஈழத்தமிழர்களின் அரசியல் வேணவாக்களை மிதவாதப்போக்குடன் கையாண்ட தலைவர்களுள் மிக முக்கியமானவர் இரா.சம்பந்தன். இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளை முன்கொண்டு சென்றதில் சம்பந்தனின் பங்களிப்பு கனதியான இடத்தை வகிக்கின்றது என்று யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

அந்தச் சங்கம் வெளியிட்ட இரங்கல் குறிப்பில்,

ஈழத்தமிழர் போராட்டத்துக்கு முன்னான அரசியல், போராட்டக் காலத்திலான அரசியல், போராட்டத்துக்குப் பின்னான அரசியல் என மூன்று தளங்களிலும் சர்வதேசத்தால் நன்கு அறியப்பட்ட அரசியல் தலைவர் இரா.சம்பந்தன் சவால்கள் தோன்றும் போதெல்லாம் அவற்றின் உடனடி விளைவுகளை மையப்படுத்தித் தீர்வுகளை அணுகாது தனது மென்போக்கு அணுகுமுறையினால் சவால்களை மாற்றுவழிகளில் கையாண்டவர்.

அந்தப் போக்கு அவரது தனித்துவ இயல்பாக மற்றவர்களால் கணிக்கப்பட்டது. ஈழத்தமிழர்களின் வாழ்வியல் பூர்வீக மானவடக்கு-கிழக்குமண்ணை இணைத்து இரண்டு தரப்புகளும் மதிப்புணர்வுடன் அணுகிய தலைவராகவும் அவர் பார்க்கப்படுகிறார் - என்றுள்ளது. (ப-66)

## மரண அறிவித்தல்



பிறப்பு 19 . 09 . 1942

இறப்பு 03 . 07 . 2024

### இராசா பரமானந்தம்

(இளைப்பாறிய P.W.D ஓவசியர்)

(யாழ். இந்து ஆரம்பபாடசாலை, யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவன் SDC, OBA முன்னாள் உறுப்பினர்)

இல 18A சிவகுருநாதர் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பரமானந்தம் கடந்த 03.07.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளியம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற நடராசா-மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், நளினி (France), நகுலன் (Germany), நளாயினி (ஆசிரியை, யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருவருட்செல்வன் (France), ஸ்ரீபிரவீனா (Germany), இரகுலேசன் (ஆசிரியர் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், நிரூபன், நிவேதன், நிருத்திகா, சௌமியா, ஆஷா, நர்த்தனா, நயனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், சண்முகானந்தன் மற்றும் சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராணி, சுகிர்தமலர், மங்களராணி, காலஞ்சென்றவர்களான வசந்தினி, ஸ்ரீஸ்கந்தராசா, குணநாதன் மற்றும் சறோஜினி, பேரின்பநாதன், ரங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும், யமுனா, வேலாயுதபிள்ளை, சைலஜா, நிகிலா ஆகியோரின் சகோதர முறையிலானவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

18A, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 608 7687
077 812 4144

(CS 866) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகள் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடோம்

## இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

நாட்டில் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் பணம் இல்லை என்று கூறும் அதேவேளை மறுபுறம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரி இல்லாத வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்குகின்றது. அரசாங்கத்தின் இயலாமை தன்மை ஆசிரியர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்று இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தச்சங்கத்தின் செயலாளர் புயல்நேசன் தெரிவிக்கையில்;

எங்களின் போராட்டத்தை நாம் கைவிடப்போவதில்லை. அரசாங்கம் ஆசிரியர்கள் மீது கை வைக்குமேயானால் போராட்டங்கள் வெடிக்கும். எங்கள் போராட்டங்கள் நியாயமானது. போராடும் எங்களை முடக்கவேண்டாம் - என்றார். (ச-23)

**அறை வாடகைக்கு**

424/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் 9x8 அடி அளவு கொண்ட அறை மின்சாரவசதியுடன் வாடகைக்கு உண்டு. களஞ்சிய அறையாக அல்லது காரியாலயமாகப் பாவிக்க உகந்தது.

தொடர்பு:- 077 675 1649

(CS/55583) J-1

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
O/L, A/L கலை, வர்த்தகம் மற்றும் ஆங்கில இலக்கணம் SPOKEN, வினா விடை வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.
பிரான்பற்று வீதி, குபேரன் கட்டட மாடி, சங்கானை.

TEL- 077 675 1649

(CS/55584) J-1

**விற்பனைக்கு**

R.K.80 குபேட்டா இருசக்கர உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. இடம் - ஆவரங்கால்.

075 423 0003

**வாடகைக்கு உண்டு**

உடுவில் டச்சு வீதியில்
இரு கடையுடன் மேல்மாடி வீடு
வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 076 589 5340

(CS/55588) J-1

**காணி விற்பனைக்கு**

ஊரெழு திருமண மண்டபத்திற்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் 300m தூரத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவை இல்லை.

077 669 2415, 076 337 1419

(CS/28607) J-1

**பெண் வேலையாட்கள் தேவை**

**இலங்கையின் முன்னணி கொரியர் சேவிஸ் நிறுவனத்திற்கு**
**அதிக சம்பளத்துடன் நிரந்தர வேலை**

முழுமையான பயிற்சியுடன் இலங்கையின் முன்னனி விநியோக நிறுவனத்தில் இணையும் வாய்ப்பு

- இடம் : வவுனியா, மன்னார் - வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு
- POSITION - பதவி - மல்டி டியூட்டி கிளார்க்
- REQUIREMENTS - தகைமைகள்
  - O/L- தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்
  - பயிற்சி பெறுபவர்கள் பெண் விண்ணப்பதாரர்களாக இருக்கவேண்டும்
- BENEFITS - சலுகைகள்
  - குறைந்த பட்ச சம்பளம் ரூ.20,000 - ரூ.25,000 / = உடன் நிரந்த வேலை
  - தொலைபேசி கட்டணங்கள்
  - EPF / ETE பங்களிப்புகள்
  - திறமையின் அடிப்படையில் பதவி உயர்வு
- How to Apply - எவ்வாறு விண்ணப்பிப்பது
  மேற்கண்ட பதவிக்கு நீங்கள் பொருத்தமான நபராக இருந்தால் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபெசி எண்ணின் மூலம் தொடர்புகொள்ளவும்.

(CS.28423) (n-1)

T.P.: 077 121 6714, 077 332 2314
E-mail - kajakajan023@gmail.com

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Best Wishes
**திரு ஸ்ரீகந்தராசா ஜனகராஜ்**




கடந்த 05.07.2024
வெள்ளிக்கிழமை
யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தினுடைய
மாவட்ட நீதிபதி
எஸ். சதீஸ்தரன்
அவர்கள் முன்னிலையில்
அகில இலங்கை சமாதான
நீதவானாக பதவிப்
பிரமாணம் செய்து கொண்ட
திருநெல்வேலி பனிக்கர்
ஒழுங்கையில் வசிக்கும்
**திரு ஸ்ரீகந்தராசா
ஜனகராஜ் அவர்களை
பாராட்டி
வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.

(CS/55601) J-1

**அகவை அறுபது காணும் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்**




**யா/ நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தில்**
அர்ப்பணிப்புடன் அதிபராகக் கடமையாற்றி தனது அறுபதாவது அகவையில் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை
ஓய்வுபெறும் எமது **அதிபர்**

**திருமதி சோமாவதி கிருபானந்தன்**
**(SLPS -1, Sp.Tr.Maths, DSM )**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருடைய ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**மணிவிழா நாயகியின் சேவை விபரம்:**

1. கே / தெஹி / களனி த.வி. எட்டியாந்தோட்டை - ஆசிரியர் கணிதம்
   1990.02.12 - 1995.02.21
2. கே / தெஹி / புளத்கொகுப்பிட்டிய த.ம.வி - ஆசிரியர் கணிதம்
   1995.02.22 - 2006.01.31
3. கே / தெஹி / புளத்கொகுப்பிட்டிய த.ம.வி - உப அதிபர்
   2006.02.01 - 2009.01.20
4. கேகாலை வயலக்கல்வி அலுவலகம் - ஆசிரிய ஆலோசகர்
   2009.01.21 - 2011.06.05
5. யா / வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் - பிரதி அதிபர்
   2011.06.06 - 2011.09.19
6. யா / வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் - அதிபர்
   2011.09.20 - 2016.11.17
7. யா / சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் - உதவி அதிபர்
   2016.11.18 - 2019.07.28
8. யா / நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் - அதிபர்
   2019.07.29 - 2024.07.07

வாழ்த்துவோர் : **பாடசாலைச் சமூகம், பெற்றோர் மற்றும் பழைய மாணவர் சார்பாக சார்லஸ் நிர்மலகுமார்.**

(CS 55603) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை விற்பனை பெண் கைது

ஐஸ்போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைவிற்பனையில் ஈடுபட்ட யுவதி ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். மொரட்டுவை லுனாவ பகுதியில் வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளார். வீட்டிலிருந்து 80 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 500 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. (ச-இ)

## மணமகள் தேவை

1992, யாழ்.இந்து, கார்த்திகை, **Development Officer,**
மணமகன் பதிவு இல: 10773.
தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு - 04
அழையுங்கள் **076 664 9401**

## மணமகள் தேவை

1995, இந்து, திருவோணம், **Doctor, Kondavil.**
மணமகன் பதிவு இல: 10259.
தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு - 04
அழையுங்கள் **076 664 9401**

## மணமகள் தேவை

1975, யாழ். இந்து, அவிட்டம், **Engineer,U.K**
மணமகன் பதிவு இல: 10773.
தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு - 04
அழையுங்கள் **076 664 9401**

## பட்டதாரி மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவக் குடும்பம் (V) B.A 1991
திருவோணம் முதலாம் பாதம் 7ல் செவ்வாய்
கிரகபாவம் 71 3/4 **சொந்த வியாபார நிறுவனம் நடத்தும் மணமகனுக்கு உள்நாட்டு மணமகள் தேவை.** தரகர் தேவை இல்லை
**077 978 9484**
(CS/55613) J-1


## காணி விற்பனைக்கு

மறவன்புலவு கோவிலாக்கண்டி
A32 பிரதான வீதிக்கு அருகில்
27 பரப்பு வயல் காணி
விற்பனைக்குண்டு.நான்கு பக்கமும்
வேலி உண்டு. இருபக்கம்
வாய்க்கால் வசதி உண்டு.
**077 218 6351, 077 568 1344**
(CS/55612) N-1

## விற்பனைக்கு

**50Kw Supper
Soundproof ISUZU
Engine விற்பனைக்கு உண்டு.**
தொடர்புகளுக்கு:
**077 218 6351, 077 568 1344**
(CS/55611) J-1

## மரண அறிவித்தல்




| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 04 |
| 11 | 07 |
| 1944 | 2024 |

### அமரர் சீனியப்பா பொன்னம்பலம் சிவஞானம்
(பிரபல சட்டத்தரணி)

சுன்னாகம் தெற்கு முருகேச பண்டிதர் வீதியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், கொழும்பை வதிவிடமாகவும், தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தவருமான பொன்னம்பலம் சிவஞானம் (சட்டத்தரணி) அவர்கள் 04.07.2024 வியாழக்கிழமையன்று இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான தபால் அதிபர் பொன்னம்பலம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கொல்லங்கலட்டி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஓவசியர் மாணிக்கவாசகர்-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சினியின் (USA) அன்புக் கணவரும், சிந்துஜாவின் (USA) ஆருயிர்த் தந்தையும், சிவசங்கரின் (USA) அன்பு மாமனாரும், அனீஸ், அஸ்வின் அவர்களின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற தவமணி, மற்றும் சரஸ்வதி (Australia) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை (ஆசிரியர்) மற்றும் Dr.சந்திரசேகரம் (Australia), மணிமேகலை (Colombo), சுவாமிநாதன் (Singapore), இந்திரநாதன் (Canada), மண்டலநாயகம் (Kandy), ரதி (France) ஆகியோரின் மைத்துனரும், தயாளினி (Colombo), தயாபரன் (புத்தூர்), அகிலநாதன் (UK), காலஞ்சென்ற சுதாயினி மற்றும் Dr.ஷாமினி (Australia), உஷாயினி (Colombo), சிவராம் (Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், பரமேஸ்வரி, இந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், காலஞ்சென்ற வாசுதேவன் மற்றும் குமரதேவன் (UK), சுமதி (Canada), கங்கதேவன் (UK), Dr.சுகுணதேவன் (Colombo), காலஞ்சென்ற கைலதேவன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் அமெரிக்கா Floridaவில் 14-07-2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் குடும்பத்தினர்
தொடர்பு: +94 76 767 3973 (whatsapp)

## மரண அறிவித்தல்



### முத்தையா வைகுந்தவாசகன்
(ஓய்வுபெற்ற மாநகரசபை ஊழியர்,
வைகுந்தம் குளோத் சென்ரர் உரிமையாளர்)

புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா வைகுந்தவாசகன் (ஓய்வுபெற்ற மாநகர சபை ஊழியர், வைகுந்தம் குளோத் சென்ரர் உரிமையாளர்) கடந்த 05.07.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - மனோன்மணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பண்டித் தியாகராஜப்பிள்ளை - திருமகள் தம்பதியரின் மருமகனும், பத்மநயனியின் பாசமிகு கணவரும், பிரவித்யனின் தந்தையும், சந்தாதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற தயானந்தவாசகன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும், சுரேஷ், மயூரா, மானஷா, சஜீவ், பிரதீபன், பிரஷாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
லோ.கமலாதேவி (சகோதரி)
0768945073

(CS/55600) A-1

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 28 |
| 01 | 06 |
| 1953 | 2024 |

### ஜெயலட்சுமி கந்தசாமி
( ஓய்வுபெற்ற கணித ஆசிரியை - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயலட்சுமி கந்தசாமி கடந்த 28.6.2024 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான சேனாதிராஜா - இராசம்மா தம்பதியரின் இளைய மகளும், காலம்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், கந்தசாமி அவர்களின் ஆருயிர் மனைவியும், சேயோனின் அன்புத் தாயும், காலம்சென்ற சித்திராலட்சுமி, மற்றும் சத்தியலட்சுமி, இரவீந்திரநாதன், இராஜதிலகம், சுரேந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அற்புதசுந்தரி, சுப்பிரமணியம், முத்துக்குமாரசாமி, ஆறுமுகசுவாமி, லோகநாயகி ஆகியோரின் அன்பு மருமகளும், குமாரசுப்பிரமணியம், பராசக்தி, தனலட்சுமி, மங்கையர்க்கரசி, இந்திராதேவி, சித்திராதேவி, முரளிதரன், குமுதினி, முகுந்தன், வாஹினி, மாதினி, ஜனனி, துஷ்யந்தன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணேஸ்வரன், இரஞ்சிதராணி, விபலினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பவஹாரிணி, நாதஸ்வரூபிணி (இனிமை), வித்தியானந்தி ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும், சியாமசுந்தரன், தாரிணி, பாமினி, அபிராமி, கோசலைகோபன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை (கனடா நேரம்) Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave, Markham, ON L3r 5G1 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அதேஇடத்தில் இறுதிக்கிரியைகள் நண்பகல் 12.00 மணி முதல் 1.30 மணிவரை நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் Highland Hills Crematorium இல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
சேயோன் (கனடா) - 437 872 1499
இரவீந்திரநாதன், இராஜதிலகம், சுரேந்திரநாதன் (இலங்கை) 077 801 2227

தகவல்:
சேயோன் (மகன்)
"சத்தியவாசா"
குடும்பத்தினர்

(CS/55616) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை தேவராஜா

**(முன்னாள் சுந்தர்சன் எலக்ரிக்கல்ஸ் பணியாளர்-மானிப்பாய்)**

மானிப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை தேவராஜா அவர்கள் நேற்று முன்தினம் (05.07.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரோஜாவின் அன்பு கணவரும், பிரதீபன் (பிரதேச செயலகம் கண்டாவளை), ஜெயதீபன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோபனா, துஷிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜய், அபிஷானுகா, மதுஷிகா, சதுஷிகா, ஆகியோரின் பாசமிகு பேரனும், ருக்குமணியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரத்தின் மைத்துனரும், காலஞ் சென்ற ஸ்ரீரஜினி மற்றும் பவனிதரன், ஸ்ரீரதன், ஸ்ரீரதி, ஸ்ரீரஞ்சனா, சாந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், லக்ஷனா, சஜீவன், சந்துஜன், அபிஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**(மகன்கள்)**
**பிரதீபன் 0773494551**
**ஜெயதீபன் 0773276399**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**பாடசாலை முன் வீதி,**
**சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.**

**பிறப்பு 22.08.1947** **இறப்பு 05.07.2024**

(CS 55502) A-1

# மரண அறிவித்தல்

## குமாரசாமி செல்வரத்தினம் (சின்னமணி)



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், மஞ்சத்தடி தெற்கு இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி செல்வரத்தினம் கடந்த (04.07.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுதுமலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னமேனை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், குமாரதாஸ் ( லண்டன்), குமாரதர்சினி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), அருள்தாஸ் (பிரான்ஸ்), சங்கரதாஸ் (லண்டன்), குமாரநந்தினி (லண்டன்), குமாரசுகந்தினி (லண்டன்), காலஞ்சென்ற பிரகாஸ், ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரி, திருப்பதிராஜன் (ஆசிரியர், யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), ராகினி, லதா, மதியழகன், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்) அவர்களின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வவரி, இராசையா, கனகசபாபதி, ஆறுமுகம், இலட்சுமிப்பிள்ளை, சரோஜினிதேவி மற்றும் நாகையா, இராசலட்சுமி, விஜயகுமார் (அண்ணாபாம்), ஜெகதாம்பாள் (கனடா), ஆகியோரின் மைத்துனரும் தனந்தி, விசாகன், லக்ஷா, விஷ்ணவன், பவித்திரன், அஸ்வின்,தேனுஜன், அரிஸ்கா, மிதுன், சாயீஸ், சானுஜன், சகாஜன், காலஞ்சென்ற பிரவின் மற்றும் ஹர்சியா, கஜானி, சதுர்ஜா, நிவேதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம் 20.02.1941** **மறைவு 04.07.2024**

**விவேகானந்தா வீதி,**
**மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/55607) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குரிமை மீறல்கள்; இனியும் இடமளிக்கோம்

## ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 7

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் ஏற்கனவே காலம் தாழ்த்தப்பட்டு மக்களின் வாக்குரிமை அனுஅனுவாக மீறப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தாமலிருப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான ஜனநாயக மீறல்களுக்கு இடமளிக்கப்படக்கூடாது என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த சில வருடங்களாக மக்களின் வாக்குரிமை அனு அனுவாக மீறப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தாதிருக்குமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாக்குரிமை என்பது மக்களின் இறையாண்மையுடன் இணைந்த ஒரு விடயமாகும். காலங்காலமாக தேர்தல் காலம் தாழ்த்தப்படுமானால் அது ஒரு ஜனநாயக நாடாக இருக்காது. மக்களுக்கு அவர்களது நிலைப்பாடுகளை சுதந்திரமாக வெளியிடக் கூடிய சூழலில் நியாயமான தேர்தல் நடத்தப்படவேண்டும் - என்றார். (ச-இ)

## இணைய மோசடி 1000 முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 7
ஆண்டின் கடந்த 5 மாதங்களில் இணைய மோசடி தொடர்பாக 1,093 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று கணினி அவசர பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. சமூக ஊடகங்கள் தொடர்பில் 7,916 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனுகல தெரிவித்துள்ளார். (ச-இ)


மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்.
077 334 1281



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
அம்மன் அருள் வாக்கு
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
திருமதி வே. மோகனதாஸ்
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 071 241 1234, 021 221 1239
வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்
+94 712 411 234
(CS/881) J-1

காணி விற்பனைக்கு
யாழ். நகரை அண்டிய அரியாலைப் பகுதியில் நிலப்பரப்பு காணிகளும், கரம்பகம் பகுதியில் தென்னங்காணியும் உடன் விற்பனைக்குண்டு.
077 666 5628

அலுவலக பொருட்கள் விற்பனைக்கு
அலுமினிய Fittings, Computer Set, Photo Copy Machine, மேசைகள் விற்பனைக்குண்டு.
070 316 4214

விருந்தினர் விடுதிக்கு
வேலையாள்கள் தேவை
யாழ். கச்சேரி நல்லூர் றோட்டில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு கீழ்க்காணும் வேலையாள்கள் தேவை.
1. முகாமையாளர் (ஆண்/பெண்)
2. அலுவலக நிர்வாகி
3. வரவேற்பாளர்
4. அறை சுத்திகரிப்பாளர்
5. சைவ சமையலாளர்
6. பாதுகாவலர்
7. வீடு மேற்பார்வையாளர்
8. வான், ஆட்டோ சாரதி
9. கணினி இயக்குநர் (அனுபவமுள்ளவர்கள்)
உங்கள் சுயவிபரக்கோவையை (CV) கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்)
Sai Holiday Inn.
132 kachcheri Nallur Road, Jaffna.
TP : 021 222 4615 / 021 222 4616 Whatsapp 077 607 8888




புதுக்கிளை திறப்புவிழா அழைப்பிதழ்
அன்னை புத்தகசாலை
இல.7 நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது நிறுவனம் 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இல.111 ஆஸ்பத்திரி வீதியில் கொட்டடிப்பக்கமாக (SVM Gas Company க்கு எதிரில்) கிளை நிறுவனம் ஒன்றை திறக்கவுள்ளோம்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து ஒரு நிமிட பயணத்தூரம் (350 மீற்றர்).
- பிரம்மாண்டமான இட வசதி.
- வாகனத் தரிப்பிட வசதி.
- விசேட விலைக்கழிவு - 10% - 25% வரை.
- காலை 6.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்
- குளிரூட்டப்பட்ட வசதியுடன்.



எமது வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
021 222 9880, 077 248 7662.
Whatsapp 077 450 7098
அன்னை புத்தகசாலை
நிர்வாகி
(CS/55606) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர்...

துள்ளார். தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரான சம்பந்தனின் மறைவை முன்னிட்டு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே ஈஸ்வரபாதம் சரவணபவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

சுதந்திர இலங்கையின் வரலாற்றையும், இலங்கையின் இனப்பிரச்சினையையும் சம்பந்தன் நன்கு அறிவார். அவரையும் அவருடைய ஆளுமையையும் நீக்கிவிட்டு இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பிலோ அல்லது தமிழ்த் தேசியம் தொடர்பிலோ கதைத்துவிடமுடியாது.

இலங்கையின் சுதந்திரக் காலங்கள், போராட்டக் காலங்கள், ஆயுதப் போராட்டத்தின் பிற்பட்ட காலங்கள் என மூன்று தளங்களில் நின்றும் சம்பந்தனின் ஆளுமையையும் அவர் ஈழத் தமிழர்களுக்கு வழங்கிய பங்களிப்பையும் நோக்க முடியும்.

சிங்களப் பேரினவாதம், தமிழ்த் தேசியத்தை தின்று பசியாற்றிக் கொண்டிருந்த காலங்களில், தமிழ்த் தேசியத்தின் ஆபத்பாந்தவனாக சம்பந்தன் செயற்பட்டார். தூதரக உறவுகள், வெளிநாட்டு இராஜதந்திர உறவுகள் என்பனவும் அவருக்கு மிகையாகவே இருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள், சம்பந்தரை நம்பியே தமிழ் மக்களின் அரசியல்ரீதியான நடவடிக்கைகளை 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' மூலம் ஒப்படைத்தனர். அந்தளவுக்கு சம்பந்தர் தமிழினத்தின் உரிமையை வென்றெடுப்பார் என்பதை தமிழ்மக்களைப் போல புலிகளும் அறிந்திருந்தனர்.

வயோதிபம் காரணமாக, உடல் ஒத்துழைக்காமல் கதிரைக்குள் முடங்கியிருந்த போதிலும், இலங்கைக்கு வரும் சர்வதேசப் பெரும் புள்ளிகள் எவரும் சம்பந்தனைச் சந்திக்கத் தவறவிடுவதில்லை. செயற்பாட்டு அரசியலில் இருந்து இவ்வாறு ஓய்ந்திருந்தபோதிலும் இத்தகைய ஒரு மகோன்னதம் கிடைக்கின்றது என்றால், சம்பந்தனின் வரலாறும் அவர் பயணப்பட்ட பாதையும் அவ்வாறு கனதியானவை - கடினமானவை என்பதே அதன் அர்த்தப்பாடு. சம்பந்தனைத் தமிழ்த் தேசியம் தவறவிடப்போகும் பெரும் புள்ளியும் இதுவே.

தமிழ்த் தேசியத்தில் சம்பந்தன் ஒரு நூலகம். வரலாற்றுக் கடத்தி. அந்த நூலகத்தை எவ்வளவுக் எவ்வளவு நாம் கற்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு தமிழ்த் தேசியத்தின் இருப்பும் நிலைபெறும் - என்றுள்ளது. (அ-ம)

## அதிபர்கள்...

ஆசிரியர்களும் மீண்டும் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் நாளைமறுதினம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்த சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அதிபர்களும், ஆசிரியர்களும் தீர்மானித்துள்ளனர்.

கொழும்பு பொதுநூலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அரச ஊழியர்களின் தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற பேச்சுகளுக்கு அமையவே இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு 200 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் தமது முழுமையான ஆதரவை வெளியிட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொழும்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒரேயொரு நாள் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்ட இந்தப் போராட்டம், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட பலப்பிரயோகத்தின் விளைவாக இரண்டாம் நாளும் தொடர்ந்தது.

இதைத் தொடர்ந்து, பாடசாலைகளுக்கு முன்பாக கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறும், கவனவீர்ப்புப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், தற்போதும் மீண்டும் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுப்புப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"மாணவர்களின் நேரத்தை மழுங்கடிப்பதற்கு ஆசிரியர்களை அனுமதிக்கமுடியாது. ஆதலால், இவ்வாறான போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்த நிலையில் மீண்டும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## உரிய...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி, எல்விடிகல வீதியில் அமைந்துள்ள இலங்கை ராமன்ய மகா நிகாயவின் தலைமையகத்துக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி, மாகாநாயக்க தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரரிடம் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

"கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பாக நாங்கள் இப்போது தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் வர்த்தகக் கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடலை முடித்துள்ளோம். நாங்கள் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 8 பில்லியன் டொலரைக் குறைக்க முடிந்துள்ளது. அதேபோன்று, கடனைச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசமும் மற்றும் கடனை முழுமையாகச் செலுத்த 2043 ஆம் ஆண்டுவரையும் கால அவகாசம் பெறவும் முடிந்துள்ளது. இந்த நலன்களைப் பயன்படுத்தி இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த எதிர்பார்க்கின்றோம். அதற்காக, அடுத்த இரண்டு வருடங்களில் திட்டமிட்ட வகையில் செயற்பட்டால் மீண்டும் கடன்பெறாத நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்லமுடியும்.

இதேவேளை - உரிய திகதியில் தேர்தலை நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாகக் குறைக்க நான் தான் பரிந்துரைத்தேன்" - என்றார். (அ-ம)

## முன்னாள்...

கோகுல் பிறேம்குமார் (வயது-42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அடம்பன் பகுதியில் உள்ள அவருடைய வீட்டுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் நின்று உரையாடிக் கொண்டிருந்த அவரை, வாகனமொன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இதையடுத்து அவர் உடனடியாக அடம்பன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

கோபாலகிருஷ்ணன் கோகுல் பிறேம்குமார் முன்னாள் போராளியாவார். ஒரு கால் மற்றும் ஒரு கையை இழந்த அவர் பல்துறை ஆளுமை மிக்கவராக விளங்கினார்.

அவருடைய மறைவுக்குப் பலரும் இரங்கலைத் தெரிவித்துள்ள நிலையில், இந்த விடயத்தில் நீதியானதும் விரைவானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று குடும்பத்தினர் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-56-213)

## சம்பந்தனை...

களுக்கு இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சம்பந்தனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சியிலிருந்து செல்வதற்கு விரும்பும் பொதுமக்கள், கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்திலிருந்து காலை 8.30 மணிக்குப் புறப்படும் பேருந்தில் பயணிக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை - தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டப் பணிமனையின் ஏற்பாட்டிலும் இன்று காலை போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-66)

## மருத்துவ...

கண்டன ஆர்ப்பாட்டம் நாளை காலை 8 மணியளவில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்பாக ஆரம்பமாகவுள்ளது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மீள் எழுச்சிக்காக அணிதிரளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-26-20)

## இரா...

திருகோணமலை தபாற்கந்தோர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள புகழுடலுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும், நேற்றுச் சனிக்கிழமையும் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர். இன்றும் சம்பந்தனின் புகழுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என்றும், நண்பகல் 12 மணிக்கு முன்னதாக இறுதி அஞ்சலிப்பைச் செலுத்தலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 3 மணியளவில் அவரது புகமுடலைத் தாங்கிய இறுதி ஊர்வலம் அவரது இல்லத்திலிருந்து ஆரம்பமாகி அவரது புகழுடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படுமெனத் தமிழரசுக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-66)

## கிளிநொச்சியில்...



துள்ளார். கிளிநொச்சி - கோணாவில் பகுதியைச் சேர்ந்த கோ.புருசோத் (வயது - 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமும், யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-66-125)

**வாடகைக்குத் தேவை**

யாழ் நகர் எல்லைக்குள் (பிரதான வீதியில்) புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் (Restaurant) ஒன்றிற்கு கடை / வீடு வாடகைக்குத் தேவை.

**076 803 5352, 071 924 6420**

(CS/55593) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

1. கணக்காளர், உதவிக்கணக்காளர்.
   தகைமை: A/L வர்த்தகம்
   Ms Office
   Qick Book
2. களஞ்சிய காப்பாளர் - (ஆண்)

(யாழ் மாநகரசபைக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
**076 561 5492, 070 511 5335**

**வேலையாட்கள் தேவை**

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- தச்சு வேலையாட்கள் (75000/- மேல்)
- தளபாட பெயின்ரர் (60000/- மேல்)
- வேலை பழக விரும்புபவர்கள் (25000/- மேல்)

நிரந்தரமான வேலையும், தங்குமிட வசதியும் உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**

தொடர்பு:- இல. 35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, (பஸ்டிப்போ அருகாமை)

**021 221 9909, 077 300 1763**

(CS/880) J-1

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்**
**A-9 வீதி முகப்புடன் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

**Golden Real Estate (pvt) Ltd.**

**077-029 4164**
**077-329 4130**
**077-294 1521**

(CS/878) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், முனீஸ்வரன் வீதியிலுள்ள குளி 3 (தற்போது அளப்பனவு செய்யப்பட்டபடி 12 அடி அகலமும் 60 அடி நீளமும் உடையது) விஸ்தீரணமுடைய வியாபார நிலையமாகப் பாவிக்கப்படக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 695 7650

(CS/55526) J-1

---

MBSL

இலங்கை வங்கியின் ஒரு துணை நிறுவனமான மேர்சண்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா பீஎல்சீ (MBSL) நிறுவனமானது, நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனமாகும். எமது நிறுவனத்திற்கு ஆற்றல்மிக்க விளைவுசார் தனிநபர்களை கீழே காணும் பதவிகளுக்கு இணைக்கவுள்ளோம்.

### சந்தைப்படுத்தல் அலுவலர்கள் (வடக்கு மற்றும் கிழக்கு)

**பதவிக்குரிய கடமைகள்**

- நிறுவனத்தின் தயாரிப்புக்களை மேம்படுத்தி சந்தைப்படுத்துதல் (லீசிங் / தனிப்பட்ட கடன்கள் / தவணைக் கடன்கள்)
- நிகர வளர்ச்சியை அடைந்துகொள்ளும் அதேவேளை, உயர் கடன் தரத்திலான போர்ட்போலியோவைப் பேணுதல்.
- வருடம் 100% சேகரிப்பு வீதத்தை பேணுதல்.
- அனைத்து மட்டங்களிலும் நிபுணத்துவத்தை வெளிப்படுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

- க.பொ.த.(சா.த.) பரீட்சையானது ஆகக்குறைந்த தெரிவுத் தகைமையாகும்.
- சிறந்த தொடர்பாடல் திறன், கல்வித் தகைமைகள், கடன் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் நிபுணத்துவ தகைமைகள்.
- கவர்ச்சிகரமான ஆளுமை மற்றும் சிறந்த மனித தொடர்புகள் திறன்.
- வங்கி அல்லது நிதி நிறுவனங்களில் விற்பனை அல்லது சந்தைப்படுத்தலில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம்.

**வயது**

- 40 வயதிற்குக் குறைவாக இருத்தல்.

கொடுப்பனவுகள்

தகைமைகள் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விண்ணப்பதாரிக்கு, செயற்றிறன் அடிப்படையிலான கொடுப்பனவு வழங்கப்படும்.

எவ்வாறு விண்ணப்பிப்பது:

விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை மின்னஞ்சலின் தலைப்பில் / கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, உறவுமுறையற்ற தொடர்பாளர்கள் இருவரைக் குறிப்பிட்டு, தமது சுயவிபரக் கோவையை, இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள், கீழ் கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். தகுதியின் அடிப்படையிலேயே வெற்றிடங்கள் நிரப்பப்படுமாகையால், எவ்விதமான சிபாரிசுகளும் தகைமையீனமாகக் கருதப்படும். சாராம்சப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

Human Resources Department
Merchant Bank of Sri Lanka & Finance PLC,
Level 17, Bank of Ceylon Merchant Tower,
No. 28, St. Michael's Road, Colombo 03.
(e-mail: careers@mbslbank.com)

---

## VACANCY FOR THE POST OF PRINCIPAL NUFFIELD SCHOOL FOR THE DEAF & BLIND, KAITHADY, JAFFNA

The Nuffield School for the Deaf and Blind, incorporated under The Ceylon School for the Deaf and Blind (CSDB) established in 1956 has been the pioneer institution in providing education and vocational training to the hearing and sight impaired children in the North.
The schools come under the purview of the Diocese of Colombo, Church of Ceylon.

A vacancy for the above post will arise from January 2025.

If you are a dynamic, caring person with strong interpersonal skills who has the vision, dedication and is cognizant with modern education methods, please send us your CV.

**Requisites for the post:**

- Should be a graduate of a recognized University
- 10 years teaching experience preferably in the National Curriculum in Government or Private Schools.
- Experience working with Children with Special Needs, or additional qualifications in Special Education will be an advantage.
- Should be computer literate.
- Skills in Sign Language and fluency in Tamil and written and spoken English
- Share core values of working in a team
- Proactive approach to improve student outcomes

Salary is negotiable and will be commensurate with qualifications and work experience. A newly refurbished house is provided for the Principal in the school premises.

Applications giving full details with names of two unrelated referees should be emailed to hearsee@sltnet.lk on or before the 24th July 2024.

Secretary
Board of Trustees.

---

## வாடகைக்குத் தேவை

அலுவலகம் ஒன்றிற்காக வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய விசாலமான வீடு அல்லது கட்டடம் நீண்ட கால வாடகைக்குத் தேவை.
யாழ். நகரில் அல்லது நகரை அண்மித்த இடங்கள் விரும்பத்தக்கது. கே.கே.எஸ் வீதியாயின் சத்திரச் சந்தியில் இருந்து கொக்குவில் வரைக்கும் கே.கே.எஸ் வீதியை முகப்பாகக் கொண்ட வீடுகளோ கட்டடங்களோ விரும்பப்படும்

தொடர்பு: 077 607 2762 (CS.55592) (N-1)

---

## விசாக்கான Show money

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- visit visa
- student visa
- fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.

தொடர்பு:- 075 033 6759 (CS/55565) J-1

---

## வீடு, காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் அமைந்துள்ள இரண்டு வீடுகளுடன் கூடிய 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரு வீடுகளும் ஒன்றாகவும், தனித்தனியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

வி.தயானந்தன்.
தொடர்பு: 076 656 5006

---

## வேலை வாய்ப்பு

**நிதி நிறுவனத்தில் வேலை செய்ய ஆர்வம் உள்ளவரா நீங்கள் !**
இப்போதே உங்கள் சுயவிபரக்கோவையை எங்களுக்கு அனுப்புங்கள்.
**வெற்றிடம் காணப்படும் இடங்கள் :**
**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.**
E.mail :- indran.nevin15@gmail.com
T.P : (Whatsapp) 077 329 0597 (CR/42781) J-1

---

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் இராசபாதையில் அமைந்துள்ள கல்வியியற் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்புக் காணியும், 12 அடி பாதையுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

074 125 1090 (CS/55610) N-1

---

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பான்சிகடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
நாளாந்தம் - 1800 வழங்கப்படும்.
Light Vehicle வாகனம் ஓடத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- 075 225 1078 (CS/55574) J-1

---

## விசா ஆலோசனை சேவை

**கனடா ரூரிசம் பிரைவேட் லிமிட்டட்**
கனடா விசிட் விசாவிற்காக 2024ல் இட்பெறும் கனேடிய சர்வதேச விழாக்களுக்கான ஸ்பொன்சர்சிப் குழு விசாக்கள் உள்ளன.
சட்டரீதியான வழிமுறைகள் ஊடாக சரியான விசா ஆலோசனைகளைப் பெற்று உங்கள் வெளிநாட்டு கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்.
**எமது சேவைகள்**
யூகே. இத்தாலி வேர்க் ஓடர்கள் உள்ளன.
நிராகரிக்கப்பட்ட விசாக்களை மீள பெற்றுத் தருகின்றோம். கனடா. பிரான்ஸ். இத்தாலி. போலந்து. நியூஸிலாந்து. அவுஸ்ரேலியா. லண்டன். ஜேர்மனி போன்ற சகல நாடுகளுக்குமான விசிட் விசா. செங்கன் விசா. வேலை விசாக்களுக்குமான சேவை.
➤ வங்கி உத்தரவாதம்
➤ சகல விசா படிவங்கள் பூரணப்படுத்தல்
இந்தியாவில் இருந்து ஹோட்டல்களுக்கான பணியாளர்களை வரவழைத்துக் கொடுத்தல். கனடா ஆவணங்களை சமர்ப்பித்து 48 மணிநேரத்தில Finger Print ஏற்பாடுக்கான துரித சேவை.

தொடர்பு:-
077 604 0373
+44 740 508 6762 (CS/28426) J-1

---

## கணித வகுப்பு

தரம் 10, 11 ஆகிய வகுப்புகளுக்கு கணித பாடம் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்

071 379 5583, 077 262 7890

---

## வேலையாள் தேவை

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கும், 4 வயது குழந்தையை பராமரிப்பதற்கும் தங்கி நின்று வேலை பார்க்கக் கூடிய **வேலையாள் தேவை.**
(சம்பளம் - 30.000 பேசித் தீர்மானிக்கலாம்.)

077 078 4411, 075 078 4466 (CS/55528) J-1

---

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 150m தூரத்தில் நவீன வசதி (எட்டு அறைகள்) கொண்ட **வீடு வாடகைக்கு உண்டு.**
**தொடர்புகளுக்கு:-**
077 306 8993, 077 711 3861 (CS/875) J-1

---

## காணி விற்பனைக்கு

குடத்தனை 6ம் கட்டை, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதான வீதி முகப்பில் 8 பரப்பு வயல் / தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. நீர் வசதியுண்டு. நான்கு பக்கமும் வேலியுண்டு.

தொடர்பு:- 077 607 1142 (CS/28144) J-1

---

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி பிரபல அழைப்பிதழ் நிறுவனத்திற்கு Social Media, Basic website, Basic Accounts Admin Female Staff தேவை.

தொடர்பு:- 077 815 2693 (CS55594) N-1

---

## கணக்காளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல தொழிற்சாலை ஒன்றிற்கு **அனுபவமிக்க கணக்காளர் Accountant** தேவை. சம்பளம் அனுபவத்திற்கேற்ப 75000/- to 100000/- வரை வழங்கப்படும்.

தொடர்பு:- 077 788 5039 (CS/870) J-1

---

## வேலைக்கு ஆள் தேவை

ரியூசன் சென்ரரில் **Clerk** வேலைக்கு பெண்கள் மட்டும் தேவை.
**இடம்: யாழ்ப்பாணம்**
தொடர்புகளுக்கு:
077 450 8746

---

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

**சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்**
தொடர்புகளுக்கு:
074 173 7684 (CS/55548) J-1

---

# தமிழ் மக்களுக்காக ஓங்கி ஒலித்த குரல்!

## சி.வீ.கே.சிவஞானம் இரங்கல்

கொழும்பு, ஜூலை 7

தனது இளமைக் காலத்திலிருந்தே தமிழையும், தமிழ் மண்ணையும், கலாசாரத்தையும், இன அடையாளத்தையும், பண்பாடுகளையும் இறுதி வரை நேசித்த இரா.சம்பந்தனின் ஓங்கி ஒலித்த குரல் இன்று ஓய்ந்து விட்டது. தமக்குச் சரியெனப் பட்டதை துணிந்து கூறி எம்மை வழி நடத்திய பெருந்தகை.

இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தந்தை செல்வநாயகத்தினால் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஈர்க்கப்பட்டு இணைந்து கொண்டவர். ஈழத் தமிழினத்தின் தேசிய அடையாளத்தை நிலை நிறுத்துவதிலும், அதன் தன்மான, தன்னாட்சி உரிமையை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்காதவராகவே சம்பந்தன் ஐயா விளங்கினார். ஆற்றல், அறிவுடமை, அனுபவம், அரசியல் அணுகுமுறை காரணமாக தெற்கத்திய சிங்களத் தலைவர்களாலும், சர்வதேச மட்டத்தாலும் மதிக்கப்பட்டவர். இத்தகைய பெருந்தகை சம்பந்தன் ஐயா எம் எல்லோரது உள்ளங்களில் நினைவு நிலையில் இருப்பார் என்பது திண்ணம் - என்றார். (ச-25)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நீதியற்ற நெற்றியில் நீறதைப் பூசியிங்கே
சாதி பார்த்து சமயப்பணி செய்யும் மேனியர்
நாதியற்றோர்க்கிழைத்த கொடுமையின்
சேதியைச் சொல்வதும் பொல்லாப்பே இவ்வுலகில்!

- கொரோனாச் சித்தர்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆனி 23 | ஞாயிற்றுக்கிழமை (07.07.2024) | சிகரம் :209


# நிலத்துக்குள் புதையுமா யாழ்ப்பாணம்?

மருத்துவர் சி.ஜமுனாநந்தா

அண்மையில் புவியியல் பொறியியலாளர்களால் ஆராயப்பட்ட செய்மதித் தரவுகளில் இருந்து சீனாவில் உள்ள 82 நகரங்களில் 45வீதமான பகுதிக்குள் நிலத்தினுள் அமிழ்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நகரங்கள் ஆண்டுக்குச் சராசரியாக 10 மில்லிமீற்றர் என்ற அடிப்படையில் நிலத்துக்குள் இறங்குகின்றன. இதற்குப் பிரதான காரணங்களாக பூகோள வெப்பமாதலால் ஏற்படுகின்ற கடல்மட்ட அதிகரிப்பும் நவீன மயப்படுத்தப்படும் சூழல் தொகுதியும் அமைகின்றன. தற்போதைய வேகத்தில் கடல்மட்டம் அதிகரிக்குமாயின் இதன் பாதிப்பு இன்னும் 100 வருடங்களில் மூன்று மடங்காக அதிகரிக்கும்.

அதாவது கடல்மட்ட உயர்வு 2120ஆம் ஆண்டளவில் இன்னும் 0.87 மீற்றர்களாக அமையும். இதனால் கரையோரநிலங்கள் தற்போதய 6 வீதமான பாதிப்பில் இருந்து 18 வீதமான பாதிப்பாக அதிகரிக்கும்.

நிலமட்டம் தாழிறங்குவதற்கு நிலத்தடி நீர் மட்டம் அமுக்கத்துக்கும் நிலத்தின் மண்கட்டமைப்பின் பௌதீகவலிமைக்கும் இடையிலான சமனிலை சீர்குலைவதே காரணமாக அமைகிறது. நிலக்கீழ் நீரினை மிகையாக மனிதப்பாவனைக்கு எடுத்தல், நிலத்தில் கனிமங்கள், எண்ணெய்வளங்கள் என்பவற்றை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் விரைவாக அகழ்ந்து எடுத்தல், நிலத்தினுள் அதிகளவில் சேதனப்படிவுகள் உருவாகுதல், நிலத்தினுள் சேதனக் கழிவுகளைப் பாய்ச்சுதல்




என்பன ஒரு பிரதேசத்தின் புவியியல் தாழிறங்கலுக்கு துரித காரணிகளாக அமைகின்றன. இவற்றுக்கும் மேலாக துருவப்பகுதியில் பனிக்கட்டி உருகல் அதிகரிப்பு, புவி உள்ளோட்டுத் தகடுகளின் நகர்வுகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நிலம் தாழிறங்கல் என்பது எமது உலகம் எதிர்கொள்கின்ற மிகப்பாரதூரமான சூழலியல் சவால் ஆகும். இதனால் கடுமையான மனிதநேய நெருக்கடிகள் ஏற்படலாம். எனவே நிலம் தாழிறங்கல் பற்றிய விழிப்பு அனைத்து மக்களுக்கும் அவசியம். கட்டடத்துறையில் நிர்மாணப்பணிபுரிவோர், நகரவடிவமைப்போர், சுரங்கப்பணிபுரிவோர், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் இது தொடர்பான பரிமாணத்தை ஆராய்தல் வேண்டும். மேலும் சமூக உளவியல் பொருளாதார நோக்கில் சிந்திக்கவேண்டிய கடமையும் உள்ளது.

நிலமட்டம் தாழிறங்கல் பூகோளப்பிரச்சினையாக பரிணமித்ததாலும் அது ஒவ்வொரு நாட்டுக்கும் மேலும் ஒவ்வொரு நாட்டின் பிராந்தியங்களுக்கும் தனிப்பட்ட பிரச்சினையாகவும் அமைகிறது. அந்தவகையில் இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலக்கீழ் தரையின் புவியியல் கட்டமைப்பும் மன்னாரில் இருந்து முல்லைத்தீவு வரையிலான தரையின் புவியியல் கட்டமைப்பும் சுண்ணாம்புக்கற்பாறைகளின் மேல் அமைந்து உள்ளன. சீனாவில் இன்று நிகழும் நிலமட்டத்தாழிறங்கல் அனர்த்தத்தினை உற்று நோக்கி எமது பிரதேசத்திலும் இதுபோன்ற அவலம் ஏற்படாது இருப்பதற்கு உரிய திட்டங்கள் மிகவும் அவசியம்.


இவற்றுள் முக்கியமானது அந்த நிலத்தில் இருந்து நிலத்தடி நீரினை அபரிவிதமாக பாவனைக்கு எடுத்தல் மட்டுப்படுத்தப்படல் வேண்டும். சுண்ணக்கல் பாறைகளுக்கு மேல் கட்டப்படும் கட்டடங்களின் கனதி குறைக்கப்படல் வேண்டும். குறிப்பாக பெரும் கட்டடங்களைக் கட்டும்போது நிலக்கீழ் சுண்ணக் கற்பாறைகளில் ஏற்படும் அழுத்தம் அருகில் உள்ள நிலங்கள் தாழிறங்கக் காரணமாக அமையும். அதேபோல் அதிக அளவில் குழாய்க்கிணறுகள் அமைப்பதும் நிலம் தாழிறங்கவும் கடல் காவு கொள்ளவும் காரணமாக அமையும். அடுத்து எமது பிரதேசத்தில் வகைதொகையின்றி சுண்ணக்கற்கள் அகழ்வதைத் தடைசெய்தல் வேண்டும். கட்டடங்களை நிர்மாணிப்பதையும் வீதிகள், வடிகால்கள் அமைப்பதனையும் எமது பிரதேச மண்ணியலுக்கு ஏற்றதாகச் சிந்திக்கவேண்டும். ■

> பெரும் கட்டடங்களைக் கட்டும்போது நிலக்கீழ் சுண்ணக் கற்பாறைகளில் ஏற்படும் அழுத்தம் அருகில் உள்ள நிலங்கள் தாழிறங்கக் காரணமாக அமையும். அதேபோல் அதிக அளவில் குழாய்க்கிணறுகள் அமைப்பதும் நிலம் தாழிறங்கவும் கடல் காவு கொள்ளவும் காரணமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கே.வி.தவராசா





# கோத்தாபய மீது கொலைமுயற்சி; வித்தியாசமான விசாரணைகள்

இறுதி யுத்தம் தொடங்கிவிட்டிருந்தது. 2006.12.01 அன்று காலை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இளைய சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ச, அலரி மாளிகையில் நடைபெறவிருந்த பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கொள்ளுப்பிட்டி தர்மபால வீதியில் அமைந்துள்ள பித்தளைச் சந்தி என்ற இடத்துக்கு அருகாமையில் தனது பாதுகாவலர்களுடன் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது முச்சக்கர வண்டியில் வெடிகுண்டுகளைப் பொருத்தி வந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்கவைத்தார். பாதுகாப்புச் செயலாளரை கொலைசெய்வதே இந்தத் தாக்குதலின் பிரதான நோக்கம். ஆனால் இந்தத்தாக்குதலில் பாதுகாப்புச் செயலாளர் மயிரிழையில் உயிர் தப்ப, இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதுடன் ஏழு பாதுகாப்புப் படையினர் படுகாயம் அடைந்தனர். அரச பொதுச் சொத்துகளுக்கு பெருஞ்சேதம் விளைவிக்கப்பட்டது. இந்தக் குற்றங்களை உள்ளடக்கி, கறுவாத்தோட்டப்பொலிஸாரினால் அறிக்கையொன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.



## மூவர் கைது

முதலில் இந்த விசாரணைகளைக் கறுவாத்தோட்டப் பொலிஸார் மேற்கொண்ட போதிலும் பின்னர் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின்கீழ் குற்றப்புலனாய்வுத் துறைப் பொலிஸாரிடம் விசாரணை பாரம் கொடுக்கப்பட்டது. குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கும் பொழுது, மோதரை பொலிஸார், மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்டபகுதியில் நடந்த குண்டுவெடிப்பு குற்றச்செயல்கள் சம்பந்தமாக அந்தப் பகுதியைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது மூன்று நபர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட அந்த மூன்று நபர்களையும் விசாரணை செய்யும்போது பாதுகாப்புச் செயலாளரை கொலைசெய்ய முயற்சி செய்த வழக்கில் தேடப்படும் சந்தேகநபர்கள் இவர்களென அடையாளம் காணப்பட்டதாகத் தெரிவித்த மோதரைப் பொலிஸார், அந்த மூவரையும் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக தாங்களே அந்த மூவருக்கும் எதிராகத் தடுப்புக்காவல் உத்தரவு பெற்று விசாரணையை நடத்தினர். கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை பொலிஸார் மேலதிக விசாரணை செய்த வேளையில் அவர்களில் ஒருவர், 'உண்டியல் மார்க்கமாகத் தனக்கு வந்த ஐந்து இலட்சம் ரூபா பணத்தை வெள்ளவத்தையிலுள்ள நாணய மாற்று நிறுவனத்தில் பெற்றுக் கொண்டதாகவும், அந்தப் பணத்திலேயே பாதுகாப்புச் செயலாளரைக் கொலை செய்ய முயற்சித்த தற்கொலைக் குண்டுதாரி, முச்சக்கர வண்டியை வாங்கியதாகவும்' தெரிவித்துள்ளார்.

## ரவிக்குமார் கடத்தல்

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இங்கிலாந்துப் பிரஜையான அருணாசலம் ரவிக்குமார் வெள்ளவத்தையில் வெளிநாட்டு நாணயமாற்று நிலையம் ஒன்றை நடத்தி வந்தார். 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி இரவு தனது தொழில் ஸ்தாபனத்தில் இருந்து வேலை முடிந்து பம்பலப்பிட்டியில் உள்ள தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் வெள்ளை வாகனத்தில் வந்த சிலரால் ரவிக்குமார் கடத்திச் செல்லப்பட்டார். அன்றிரவு வழமைபோல் ரவிக்குமார் வீடு வந்து சேராமையால் கலக்கம் அடைந்த அவரது மனைவியும் உறவினரும் தங்களால் முடிந்தளவு தேடிப்பார்த்ததையடுத்து கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிய வந்தது. ரவிக்குமாரின் நிறுவனத்தின் ஊடாக வந்த பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டியே கோத்தாபய மீதான கொலை முயற்சிக்குப் பயன்பட்டதாக கைதியொருவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். எனவே ரவிக்குமார் கொலைமுயற்சிக்கு உடந்தையாக இருந்துள்ளதாக சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுவதாகவும், ஆகையால் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடைபெறுவதாகவும் கூறப்பட்டு கறுவாத்தோட்டப் பொலிஸாரினால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் விசாரணையின் முதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றிய விசாரணையை முதலில் கறுவாத்தோட்டப் பொலிஸார் நடத்தியபோதும், பின்னர் பொலிஸ்மா அதிபரின் கட்டளையின் பிரகாரம்குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் மேலதிக விசாரணை கையளிக்கப்பட்டது. அதனால் முதல் அறிக்கையை கறுவாத்தோட்டப் பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தபோதிலும் மேலதிக அறிக்கைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினரே தாக்கல் செய்தனர்.

விசாரணைகளின் தொடர்ச்சியினையடுத்து ஓர் இந்துமதகுரு உட்பட மேலும் மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் கிளிநொச்சி, மலையாளபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட ஆறாவது சந்தேகநபர் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் வவுனியா மகா வித்தியாலய தடுப்புமுகாமில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அவர் மத்துகம [illegible] நிலையத்தில் விசாரணைக்[illegible] வைக்கப்பட்டு பின்னர் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

ஏழாவது சந்தேகநபர் 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதி திருகோணமலைப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட பின்னர். காலித்துறைமுகப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு தென்மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ் விசாரிக்கப்பட்டு கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

## ஒரு வழக்கு; ஏழு பொலிஸ் நிலைய விசாரணை




முதலாவது சந்தேகநபராக பொலிஸாரினால் வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்ட ரவிக்குமார் உட்பட ஏழு சந்தேகநபர்களையும் ஒரு கொலை முயற்சி அறிக்கையின் அடிப்படையில் முதலில் கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்திலும் பின்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்களம், கொட்டாஞ்சேனை, காலி, மத்துகம, திருகோணமலை என ஆறு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணை நடத்திய ஒரே வழக்கு இதுதான். இந்த வழக்கில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமையகுற்றப்புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த அதேசமயத்தில், சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களை குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் கையளிக்காமல் கொட்டாஞ்சேனை, காலி, மத்துகம, திருகோணமலை பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாரும் விசாரணைகளை செய்தனர். சந்தேகநபர்களைக் கைது செய்த கொட்டாஞ்சேனைப் பொலிஸார் அவர்களை பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்காமல், கைதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு விசாரணைகளை தாங்களே மேற்கொள்வதுடன் மேலதிக அறிக்கைகளையும் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். மேலும் ஒவ்வொரு வழக்குத் தவணையிலும் வெவ்வேறு பொலிஸ் நிலையங்களிலுமிருந்து சந்தேகநபர்களைக் கொண்டுவந்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வருடக்கணக்காக விசாரணைகள் நடைபெற்றபோதிலும் வழக்கு முடிவடைவதாகத் தெரியவில்லை, பொலிஸ் திணைக்கள நடைமுறையின்படி பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகளில் முன்னேற்றம் எதுவும் காணப்படாத முக்கியமான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு பாரம் கொடுப்பதே நடைமுறை. ஆனால் அது இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை.

*(மிகுதி அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தர்: "பேசுவோம்"

நிலாந்தன்

சம்பந்தரின் மரணம் ஈழத்தமிழ்ச் சூழலில் எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பது ஈழத்தமிழர்களின் கூட்டு உளவியலின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். அவருடைய பூதவுடல் யாழ். நகரப் பகுதிக்கு அருகே வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் நகரம் வழமைபோல இயங்கியது. அதன் ஒலி பெருக்கிகளில் சினிமாப் பாடல்கள் இசைக்கப்பட்டன. நகரம் ஏன் துக்கிக்கவில்லை?

சமூகவலைத்தளங்களில் ஒருபகுதி அவரை கௌரவமாக அஞ்சலித்தது. இன்னொருபகுதி கேவலமாக நிந்தித்தது. அது தமிழ் அரசியல் பண்பாட்டின் வீழ்ச்சியையும் காட்டியது. நவீன தமிழ் அரசியலில் குறிப்பாக சமூக வலைத்தளங்களின் காலத்தில்;மீம்ஸ்களின் காலத்தில், அதிகம் கீழ்த்தரமாக நிந்திக்கப்பட்ட ஒரு தலைவராக சம்பந்தரைக் கூறலாம். அவருடைய இறப்பின் பின் அவரைப்பற்றி வரும் குறிப்புகள் பெரும்பாலும் அதைத்தான் காட்டுகின்றன

2009க்கு பின்னரான கொந்தளிப்பான ஒரு மனோநிலையின் விளைவுகளே அவை. இந்தக்கொந்தளிப்பான கூட்டுஉளவியலுக்குத் தலைமைதாங்கி ஈழத்தமிழரசியலை ஒரு புதிய பண்புருமாற்றத்தை நோக்கிச் செலுத்த வேண்டிய தவிர்க்கப்படவியலாத ஒரு பொறுப்பை காலம் அவருடைய கைகளில் கொடுத்தது. ஆனால் அதை அவர் எவ்வாறு கையாண்டார் என்பதை இப்பொழுது அவரை அஞ்சலித்தும் நிந்தித்தும் வரும் குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஈழத் தமிழர்களின் நவீனவரலாற்றில் நீண்டகாலங்கள் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் இருவர். ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர். மற்றவர் சம்பந்தர். இருவருமே ஒப்பீட்டளவில் நீண்டகாலம் தமிழ்மக்களின் அரசியலை நிர்ணயித்தார்கள். குறிப்பாக சம்பந்தர் 2009க்குப்பின்னிருந்து கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழரசியலின் தவிர்க்கப்படமுடியாத முதிய தலைவராகக் காணப்பட்டார். அவருக்கு பின்வரும் முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவதாக அவர் ஒரு மூத்த தலைவர். இரண்டாவதாக அவர் கிழக்கை மையமாகக்கொண்டு எழுச்சி பெற்ற தலைவர். மூன்றாவதாக, அவர் நீண்டகாலம் தமிழ்மக்களின் அரசியலை தீர்மானித்தவர்களில் ஒருவர்.

அவருடைய நம்பிக்கைகளை பொறுத்தவரை சம்பந்தர் ஆயுதப் போராட்டத்தில் முழுஅளவு ஆதரவாளர் அல்லர். குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களைக் கொண்டிருந்தார். எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார். தன்னை சுதாகரித்துக்கொண்டார். ஆனால் அதற்காக அவர் ஆயுதப் போராட்ட வழிமுறையை ஏற்றுக்கொண்டார் என்று பொருள் அல்ல. அதனை ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் அவருடைய வழி எதுவென்று தொகுத்துப் பார்த்தால் தெரிய வரும்.

## சம்பந்தரின் வழி எது?

ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று சிந்தித்தால் அதாவது பிரிவினை அல்லாத வேறு எந்த ஒரு தீர்வைப்பற்றிச் சிந்தித்தாலும் அதற்கு சிங்கள மக்களின் சம்மதம் அவசியம் என்று சம்பந்தர் நம்பினார். எனவே சிங்கள மக்களை எப்படி அரவணைப்பது? அவர்கள் மனதில் இருக்கும் பகையுணர்வை, அச்சங்களை முற்கற்பிதங்களை எப்படி நீக்குவது? என்றும் அவர் சிந்தித்தார். ஆயுதப் போராட்டம் சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளிவிட்டது என்றும் அவர் நம்பினார். எனவே, சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளாத ஓர் அரசியல் வழியை அவர் கடைப்பிடித்தார். சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது என்று அவர் தீர்மானித்தார். அதை நோக்கியே கட்சியைச் செலுத்தினார். அதனால்தான் முதலில் கஜேந்திரகுமார் அணியை வெளியேவிட்டார். அதனால்தான் சுமந்திரனை உள்ளே கொண்டு

> சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முற்பட்டு அதில் தோல்விகண்டார். அதாவது வரலாறு அவருக்கு வழங்கிய பெறுமதியான ஆண்டுகளை அவர் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டத்துக்கு பின்னரான தமிழரசியலில் பண்புரு மாற்றத்துக்கு தலைமை தாங்க அவரால் முடியவிலை. இரண்டாவதாக, சிங்கள மக்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்ததன்மூலம் அவர் எதையுமே பெற முடியவில்லை. மாறாக, தான் தலைமை தாங்கிய கூட்டின் சிதைவுக்கும் அதனால் காரணமாக அமைந்தார்.

வந்தார். அதனால்தான் விக்னேஸ்வரனையும் உள்ளே கொண்டுவந்தார். 2015 இல்நிகழ்ந்த ஆட்சிமாற்றத்தில் சம்பந்தரின் பங்களிப்பு இருந்தது. அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட ரணில் - மைத்திரி அரசாங்கம் ஐ.நாவின் 30/1 தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. நிலைமாறுகால நீதிக்கான அந்தத்தீர்மானத்தின் பிரகாரம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டமைப்பு சார் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதன்படி நாடாளுமன்றம் ஒரு சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு, ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சம்பந்தர் அதில் முழுமையாக ஒத்துழைத்தார். அதுவரையிலும் இருந்த எல்லா யாப்புகளும் தமிழ்மக்களின் பங்களிப்பின்றி உருவாக்கப்பட்டவை என்பதனால், தமிழ்மக்களின் பங்களிப்போடு ஒரு புதிய யாப்பை உருவாக்கவேண்டும் என்றும் அவர் கனவு கண்டார். அதை நம்பித்தான் தமிழ்மக்களுக்கு ஒவ்வொரு பெருநாளின் போதும் வாக்குறுதிகளை வழங்கினார். அதுமட்டுமல்ல, மன்னாரில் நடந்த "தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்?" என்ற ஒரு கருத்தரங்கில், ஆயர்களின் முன்னிலையில், அவர் அந்த நம்பிக்கையை எப்படி வெளிப்படுத்தினார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதில் உரையாற்றிய நான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினேன். மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பு இன்றி, மூன்றாவது தரப்பு ஒன்றின் நெருக்குதல் இன்றி சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்பானது, இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வராது என்று நான் அந்த உரையில் சுட்டிக்காட்டினேன். ஆனால் சம்பந்தர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தலையை சாய்த்து மண்டைக் கண்ணால் என்னைப் பார்த்தபடி சொன்னார்... "சிங்கள - பௌத்த பெருந்தேசிய வாதம் ஒரு தீர்வைத் தராது என்பது ஒரு வறண்ட வாதம்; ஒரு வறட்டு வாதம்" என்று

யாப்புருவாக்க முயற்சிகள் ஓர் இடைக்கால வரைவு வரை முன்னேறின. அந்த இடைக்கால வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதித்தபொழுது அதில் டிலான் பெரேரா ஆற்றிய உரையை இங்கு சுட்டிக்காட்டலாம். அது சம்பந்தரின் அரசியல் வழியை மிகக் கூர்மையாக வெளிப்படுத்தும் ஓர் உரை. "சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காணவேண்டும். அவரைப்போல விட்டுக்கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வரமாட்டார்" என்று டிலான் உரையாற்றினார். அதுதான் உண்மை. ரணில் மைத்திரி அரசாங்கத்தோடு இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக சம்பந்தர் அடியொட்ட வளைந்து கொடுத்தார். விளைவு என்ன?

யாப்புருவாக்க முயற்சிகளை அதன் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேனவே 2018இல் காட்டிக்கொடுத்தார். சம்பந்தரின் கனவு கலைந்தது. அவர் தமிழ் மக்களுக்கு வழங்கிய எல்லா வாக்குறுதிகளும் பொய்த்துப்போயின. சிங்கள மக்களுக்கு நம்பிக்கை வரும் வரையிலும் விட்டுக் கொடுப்பதன் மூலம், ஒரு தீர்வைப் பெறலாம் என்ற அவருடைய நம்பிக்கை தோற்கடிக்கப்பட்டது. அந்த நம்பிக்கை மட்டும் தோற்கடிக்கப்படவில்லை. அதன் விளைவாக கட்சி அதுவரையிலும் வகித்து வந்த ஏகபோகத்தை இழந்தது. அடுத்த தேர்தலில் கட்சியின் வாக்குகள் சிதறின. அதுமட்டுமல்ல, கட்சியே இப்பொழுது சிதறி விட்டது.

அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் சிதறவில்லை. தமிழரசுக் கட்சியே இரண்டாக உடைந்துவிட்டது. எனவே இப்பொழுது தொகுத்துப்பார்க்கலாம். கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் கடந்த 15 ஆண்டுகளிலும் எதைச் சாதித்தார் என்று பட்டியலிடலாம்...


முதலாவதாக, சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முற்பட்டு அதில் தோல்விகண்டார். அதாவது வரலாறு அவருக்கு வழங்கிய பெறுமதியான ஆண்டுகளை அவர் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டத்துக்கு பின்னரான தமிழரசியலில் பண்புரு மாற்றத்துக்கு தலைமை தாங்க அவரால் முடியவில்லை. இரண்டாவதாக, சிங்கள மக்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்ததன்மூலம் அவர் எதையுமே பெற முடியவில்லை. மாறாக, தான் தலைமை தாங்கிய கூட்டின் சிதைவுக்கும் அதனால் காரணமாக அமைந்தார். ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் அதிக ஆசனங்களை கொண்டிருந்த ஒரு

(04 ஆம் பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் கைவண்ணம்



ச.கீர்த்தனி
தரம் - 11
யா/சாவகச்சேரி
இந்துக்கல்லூரி



கே.ஜனார்த்தன்
தரம் - 7
யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி



க.கஸ்மிகா
தரம் - 4A
யா/நல்லூர் சென்.பெனடிக்
வித்தியாலயம்

மாணவர்களே!

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



தி.அக் ஷயன்
தரம் - 3B
யா/இந்து ஆரம்பப்
பாடசாலை



றொ சல்வின்
தரம் - 8D
யாழ்.பரியோவான் கல்லூரி
யாழ்ப்பாணம்

# சம்பந்தர்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் அந்தக் கூட்டுக்கு அவர் தலைமை தாங்கினார். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் கூட்டு உடைந்து டைந்து சிறுத்துக் கொண்டு வந்து இப்பொழுது தமிழரசுக் கட்சியாக சிறுத்து விட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் இரண்டாக உடைந்துவிட்டது.தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவம் 22 ஆசனங்களில் இருந்து 13ஆசனங்கள் வரையிலும் உடைந்துபோனமை மகா தோல்வி.

அதுபோலவே தன்னுடைய சொந்தத் தொகுதியிலும் அவர் தொடர்ச்சியாகப் பெற்றுவந்த வாக்குகளை பட்டியலிட்டுப் பார்த்தால் அதில் படிப்படியாக வீழ்ச்சியைக் காணலாம். இப்பொழுதிருக்கும் நிலையில் திருக்கோ ணமலையில் தமிழரசுக் கட்சிக்குப் போட்டியாக மற்றொரு தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சி களமிறங்கினால் இம்முறை சம்பந்தர் பெற்ற ஆசனம் அடுத்த முறை கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.சிலசமயம் சம்பந்தரின் அனுதாப வாக்குகள் கிடைக்கக்கூடும்.

இவ்வாறு,தான் தலைமை தாங்கிய கூட்டுக்குள்ளும் ஒரு தலைவராக தோல்வியடைந்து,தனது சொந்தத் தேர்தல் தொகுதியில்,தனது தாய்ப்பட்டினத்தில்,தன்னுடைய ஆத ரவுத் தளத்தை படிப்படியாகத் தேய விட்டதில் தோல்வி யுற்று,தான் அங்கம் வகிக்கும் மூத்த கட்சிக்குள்ளும் ஒரு தலைவராக அவர் தோல்வியடைந்து விட்டார்.

ஒரு தலைவர் தன் வாரிசுகளாகக் களமிறக்கும் அரசியல் வாதிகள் அந்த தலைவரின் பெயரை வரலாற்றில் ஸ்தாபிப் பவர்களாக அமையவேண்டும். ஆனால் சம்பந்தர் கொண்டு வந்த சுமந்திரனோ அல்லது விக்னேஸ்வரனோ அவ்வாறு இருக்கவில்லை. விக்னேஸ்வரன் சம்பந்தரின் வழி தவறு என்று கூறி அவரிடமிருந்து விலகிச் சென்றார். சுமந்திரன் சம்பந்தரின் பட்டத்து இளவரசர் போல காணப் பட்டார்.ஆனால் கட்சிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த பொழுது அவர் சம் பந்தரை பொதுவெளியில் அவமதித்தார்.தன்னுடைய வாரிசினாலேயே அவமதிக்கப்படும் ஒரு தலைவராக சம் பந்தர் அவருடைய இறுதிக் காலத்தில் காணப்பட்டார்.

அவருடைய தாய்க்கட்சி நீதிமன்றத்துக்கு இழுக்கப்பட்ட பொழுது அதைத் தடுக்கும் சக்தியற்றவராக அவர் இருந் தார்.சாதாரணமாக ஒரு குடும்பத்தில் பிணக்கு என்று வரும்பொழுது மூத்தவர்கள் அதைத் தீர்த்து வைப்பார்கள். கட்சிக்குள்ளும் அப்படித்தான்.எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முது தலைவர்கள் பிணக்குகளைத் தீர்த்து வைப்பார்கள்.ஆனால் மிக மூத்த தலைவராக அவருடைய சொல்லை அவருடைய வாரிசே கேட்கவில்லை. விளை வாக கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது.

அது மட்டுமல்ல அவருடைய சொந்தத் தேர்தல் தொகுதி யில் தன்னை மதியாமல் நியமனங்கள் செய்யப்படுகின் றன என்ற பொருள்பட அவர் ஒரு முறைப்பாட்டைச் செய்யுமளவுக்கு பலவீனமாக காணப்பட்டார். சம்பந்தரின் சுமார் இரண்டு தசாப்த கால தலைமைத்துவத்தை மதிப்பிட இது ஒன்றே போதும்.அவர் தன்னுடைய தாய்க்கட்சியைச் சிதைய விட்ட ஒரு தலைவர். அவரால் எப்படித் தேசத்தைத் திரட்டியிருக்க முடியும்?

எனவே சம்பந்தரின் கடந்த சுமார் இரண்டு தசாப்த கால தலைமைத்துவத்தை தொகுத்துப் பார்த்தால் கிடைக்கும் விடை என்ன? திருகோணமலையைச் சேர்ந்த ஒரு கிறிஸ் தவ மதகுரு (அவர் ஒரு முக்கியமான சமூக அரசியல் செயற்பாட்டாளரும் கூட) சில ஆண்டுகளுக்கு முன் என் னிடம் கேட்டார். "சம்பந்தர் இறந்தால் அவருடைய கல்ல றையில் என்ன வார்த்தையைப் பொறிக்க வேண்டும்?" என்று. "என்ன வார்த்தை?" என்று நான் கேட்டேன். அவர் சொன்னார் "பேசுவோம்" என்று போடலாம்.

## தகவல் பெட்டி

1. தொலைபேசியை கண்டுபிடித்தவர் கிரஹம்பெல் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் செய்துகொண்டிருந்த பணி என்ன தெரியுமா? காது கேளாதவர்களுக்கு பேச்சுக் கற்றுக்கொடுப்பதே.
2. சீனாவின் தேசிய சின்னம் – டிராகன்
3. பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்த்துக்கீஸ், இத்தாலியன் மற்றும் ரோமானிய மொழிகள் இலத்தீன் மொழியிலிருந்தே தோன்றியவை. இவற்றை நானூறு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பேசுகிறார்கள்.
4. உலக சிரிப்பு தினம் ஜனவரி 10ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.
5. ஈரான், ஈராக் நாடுகளின் பழைய பெயர்கள் முறையே பெர்ஷியா, மெஸபடோமியா.
6. முன்னாள் இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவின் சுயசரிதையின் பெயர் தி.இன்சைடர்
7. ரஷ்ய விண்கலம் ஒன்றின் பெயர் ஸ்புட்னிக்
8. தாகூருக்குப் பின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் ஷ.எஸ். நைபால்
9. உலகின் மிகப்பெரிய விமானசேவை நிறுவனம் அமெரிக்கன் எயார் லைன்ஸ்

த.அரி[illegible] ஆத்மயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திய கிழக்கில் வலுப்பெறும் போர்

ஆர்.பிரகாஷ்

கடந்த பல தசாப்தங்களாகவே போர் மேகம் சூழ்ந்துள்ள மத்திய கிழக்கில், தீவிர மோதல் ஏற்படுவதற்கான அத்தனை வாய்ப்புகளும் தென்பட ஆரம்பித்திருக்கின்றன. பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பை நீக்குவதாகவும், பயங்கரவாதிகள் என்ற அடையாளப்படுத்தலின் கீழ் ஹிஸ்புல்லா அமைப்பை நோக்குவது ஏற்புடையது அல்ல என்றும் அரபுக் கூட்டணி அறிவித்திருக்கின்றது.

## சமகாலப் போர்

1947ஆம் ஆண்டுமுதல் பலஸ்தீனத்தை மெல்லமெல்ல விழுங்கி, இன்று மிகப்பெரும் தேசமாகத் தன்னை நிலைப்படுத்தி வைத்திருக்கின்றது இஸ்ரேல். இஸ்ரேலின் இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், சுதந்திர பலஸ்தீனத்தை மலர வைப்பதற்காகவும் தோற்றம் பெற்ற இரண்டு அமைப்புகளாக ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா என்பவை கொள்ளப்படுகின்றன. கடந்தவருடம் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் அத்துமீறித் தாக்குதலை நடத்தியது ஹமாஸ். இந்தத் தாக்குதலில் ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட யூதர்கள் கொல்லப்பட்டனர். 150 க்கும் மேற்பட்டவர்கள் இஸ்ரேலால் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். இதையடுத்து ஹமாஸுக்கு எதிராக போர் அறிவிப்புச் செய்த இஸ்ரேல், காஸாவில் குருதிச் சகதியை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. 33 ஆயிரம் பேர் கொல்லப்படவும், 90 ஆயிரம் பேர் காயமடையவும், 16 லட்சம் பேர் இடம்பெயரவும் காரணமாக இந்தப் போர் இன்னமும் இஸ்ரேலின் இதயத்தை ஆற்றுப்படுத்தவில்லை. இஸ்ரேலின் வெறியாட்டம் தொடர்ந்துகொண்டிருக்கையில்தான், இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடுவது என்று களமிறங்கியிருக்கின்றன அரபு நாடுகள்.

## ஹிஸ்புல்லாவின் பலம்

காஸாவில் பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கண்டித்துள்ள ஹிஸ்புல்லா, இஸ்ரேலை அழிப்பது என்பதை தன் கொள்கையாக வரித்திருக்கின்றது. அமெரிக்கா, நேட்டோ, ஐரோப்பிய ஒன்றிம் இவற்றைத் தாண்டி இஸ்ரேல் மீது கைவைப்பதற்கு எந்தவொரு அரபு நாடுகளாலும் முடியாது. நாணயங்களால் நெய்யப்பட்ட வர்த்தக உலகில் அது சாத்தியமற்றதே. இவ்வாறானதொரு பின்னணியில்தான், ஈரானால் போஷிக்கப்பட்டு வளர்க்கப்படும் ஹிஸ்புல்லாவை வைத்து காய் நகர்த்த அத்தனை அரபு நாடுகளும் திட்டமிட்டுள்ளன. மேம்பட்ட ஏவுகணைகள், உயர் தொழில்நுட்பங்கள் என்பவற்றைக் கைவசம் கொண்டுள்ள மிகவும் பயங்கரவாத குழுவாக அறியப்படுகின்றது ஹிஸ்புல்லா. உலகில் உயர் ஏவுகணைத் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள ஒரேயொரு பயங்கரவாத அமைப்பும் ஹிஸ்புல்லாவேதான். ஆனால், தனியே ஈரானால் மட்டும் ஹிஸ்புல்லாவைப் பலப்படுத்தமுடியாது. ஏனெனில், ஈரானே அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் தற்போது அல்லாடிக் கொண்டுதான் இருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஹிஸ்புல்லா அமைப்பு பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றது.

இனி அரபு நாடுகள் ஹிஸ்புல்லாவுடன் மிக இலகுவாகத் தொடர்புகொள்ள முடியும். ஹிஸ்புல்லாவுக்கு வெளிப்படையாக இராணுவ உதவிகளைச் செய்ய முடியாதாயினும், ஏதோவொரு சட்டப்பிடிமானம் அரபு நாடுகளுக்குத் தற்போது கிட்டியிருக்கின்றது. இஸ்ரேல் தன் ஆக்கிரமிப்பையும் போரையும் தொடர்ந்தால், ஹிஸ்புல்லாவை ஓரணியில் நின்று பலப்படுத்துவோம் என்ற செய்தியை இந்த அரபுக் கூட்டணி வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்தக் கூட்டணியின் நகர்வை அமெரிக்காவால் முழுதாகப் புறக்கணிக்கவோ அல்லது துடைத்தெறியவோ முடியாது. ஏனெனில், அமெரிக்கா வருடந்தோறும் பில்லியன் டொலரில் விற்றுத்தள்ளும் இராணுவத் தளபாட வர்த்தகத்தில் அரபு நாடுகள் மட்டும் 45 வீதத்துக்கும் அதிகமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றன. அமெரிக்க ஆயுதங்களே மறைகரம் ஒன்றின் ஊடாக இஸ்ரேலுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதைத் தவிர்ப்பதற்காக அமெரிக்கா தன் ஆயுத விற்பனையை அரபு நாடுகளுக்கு நிறுத்தினால், சீனா எந்தத் தடையும் இல்லாமல் அதைப் பிரதியீடு செய்யும் என்பதுடன், உக்ரைனுக்கு வழங்கும் தாராள உதவிகளால் ஏற்கனவே நொந்துபோயுள்ள அமெரிக்கப் பொருளாதாரம் மேலும் பலவீனப்படவே ஏது நிலைகள் அதிகம். ஆக, பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் அரபுக் கூட்டணி இஸ்ரேலை சுற்றிப் போட்டுள்ளது. தான் போட்டுக்கொண்ட முடிச்சை தானே அவிழ்க்கவேண்டிய கட்டாயம் இப்போது இஸ்ரேலுக்கு!!



# கதிர்காமப் பாதயாத்திரை

1

இலங்கையின் மரபு ரீதியான பண்பாட்டு வழக்காறுகளில் ஒன்றே கதிர்காமப் பாதயாத்திரை. இது இலங்கை மக்களின் வரலாறு, பண்பாடு தொடர்பிலான ஒரு மரபுரிமையாகும். வருடந்தோறும் கதிர்காமக் கந்தனின் அருள் வேண்டி சாரைசாரையாக பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களுடனும், நேர்த்திக்கடன்களுடனும் தங்களது யாத்திரையை மேற்கொள்வது வழக்கம்.

உள்ளூர்த் தெய்வங்களான கந்தனோடும் வள்ளியோடும் தொடர்புபட்ட கதிர்காமப் பாத யாத்திரையானது காட்டு வழிப் பாதையெங்கிலும் உள்ளூர்த் தெய்வங்களை வழிபாடு செய்து இறுதியாகக் கதிர்காமக் கந்தனை தரிசிப்பதாகும்.

மாரி, கண்ணகி, வேலன் (முருகன், கந்தன்), வீரவள், பத்தினி, வயிரவர், காளி எனப் பல உள்ளூர்த் தெய்வங்களைக் குலதெய்வங்களாக வழிபடுவோர் தங்களது கடமைகளில் ஒன்றாகவும், தங்களது மரபுரிமைகளில் ஒன்றாகவும் இக்கதிர்காம யாத்திரையை மேற்கொள்கின்றனர்.

சந்ததி சந்ததியாக தங்களது பெற்றோருடன் சிறுவர்களாக நடக்கத் தொடங்கிய பெண்களும் ஆண்களும் தங்களது மகன்மார், மகள்மார், பேரன்மார்,பேர்த்திமார், கொள்ளுப் பேரன்மார், கொள்ளுப்பேர்த்திமார் என காலங்காலமாக பாதயாத்திரையை மானசீகமாக மேற்கொள்கின்றமையானது ஓர் உரிமை சார் வழக்காறாகத் தொடர்கின்றது. இந்த யாத்திரையின்போது காட்டு வழி நெடுகிலும் ஆன்மிகப் பலமும், மன அமைதியும், நிம்மதியும், ஒற்றுமையும், பாரபட்சமின்மையும் அளவில்லாமல் கிடைப்பது யாத்திரை செல்வோராக நாம் யாவரும் உணர்ந்தறிந்ததே.

வயது, பால்நிலை, வெளித்தோற்றம் போன்ற எவ்வித பாரபட்சங்களுமற்ற, ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளிக்காத, அனைவரும் சமத்துவம் என்பதை வெளிப்படுத்தும் களமாகவே இப்பாத யாத்திரை காலங்காலமாகத் தொடர்ந்து வருகின்றது.

அந்தவகையில் பல்தன்மையினைக் கொண்ட யாத்திரையில் ஒற்றைத் தன்மையான பாரபட்சம்மிக்க சில விடயங்களை முன்வைப்பது, நாம் வணங்கும் தெய்வம் எம்மிடத்தில் காட்டாத பாரபட்சங்களை எங்களுடன் வாழும் ஏனைய சக மனிதருக்கு நாம் காட்டுவது போலாகும்.

கதிர்காமப் பாதயாத்திரை அனைவருக்குமானது. கந்தன் வள்ளியின் ஆசியும், அருளும் அனைவருக்கும் கிடைக்க வேண்டியதொன்றே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாஷை

பாலாஜினி



அதிகாலை நான்கு மணிக்கு சரியாக உறக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டது பெண் கிளி சலோமியா. கணவன் றொபேட்டின் உச்ச உறக்கத்தினை குழப்பாது போர்வையை மெதுவாக விலக்கிக் கொண்டே எழுந்து பொந்துக்குள்ளிருந்து மெல்ல எட்டிப்பார்த்தது வெளியே. பக்கத்து வீட்டு சேவல் இன்னமும் உறங்கிக் கொண்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது சலோமியாவுக்கு. அது கூவுவதற்கு முன்னர் சமையலறையினை சுத்தமாக்கி விட்டு பரபரப்பாக தேநீரைத் தயாரித்து விட்டு உறங்கிக் கொண்டிருக்கும் கணவனை மெதுவாகத் தட்டி எழுப்பியது. ஆண் கிளி றொபேட் போர்வையை விலக்கி தன் பெண் துணையை எட்டி முத்தமிட்டவாறே தேநீரை வாங்கிக் கொண்டது.

"சலோமியா, இன்று எங்கு செல்வதாக உத்தேசம்? ஏதேனும் யோசித்து வைத்திருக்கிறாயா?" இரண்டும் கிளிப் பாஷையில் அழகாகப் பேசிக் கொண்டன.

"நேற்று நாங்கள் வரும் வழியில் ஒரு கிழவனின் தோட்டத்தை காட்டியிருந்தேனே. அந்தத் தோட்டத்திலே விளைந்திருந்த செர்ரிப் பழங்களை சாப்பிட வேண்டுமென்று ஆசையாக இருக்கின்றது அன்பே".

பெண்கிளி கெஞ்சலாகச் சொன்னது.

"அடி அழகி, செர்ரிப் பழங்களை நானும் பார்த்தேன். ஆனால் அங்கே நாம் வருவதை தடுப்பதற்காக ஏதேனும் ஆபத்தினை உருவாக்கியிருப்பார்களே" கவலையுடன் சொன்னது ஆண்கிளி.

"அப்படியானால் செர்ரிப் பழங்களை உண்ணும் என் ஆசையை நான் மறந்துவிட வேண்டுமா?" அழுது கொண்டே சொண்டுகளால் ஆண்கிளியை நெருடியது பெண் கிளி.

பெண்கிளியை அணைத்து முத்தமிட்டுக் கொண்டே ஆண்கிளி சொன்னது, "நீ தோட்டத்துக்குள் வராதே நான் சென்று உனக்கு தேவையான பழங்களை கொண்டு வருகிறேன்" என்று.

இதற்கிடையில் பக்கத்து வீட்டு சேவல் உரத்துக் கூவவே மற்றைய பறவை இனங்களும் விழித்துக் கொண்டன. காகத்தின் கூட்டில் காகா என்ற ஆரவாரமும் பெரிதாகக் கேட்டது.

ஆண்கிளி பெண்கிளியை துரிதப்படுத்தியது. தோட்டக்கார கிழவன் நீர் இறைக்க வருவதற்கு முன்னர் பழங்களை கொத்தி வந்துவிட வேண்டுமென அது எண்ணிக் கொண்டது.

இரண்டும் சேர்ந்து தோட்டத்தினை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. வழியில் மரங்கொத்தி மாமியைக் கண்டு வணக்கத்தினை கூறிக் கொண்டன. "கிழக்கு வெளுத்ததுவோ கீழ்வானம் சிவந்திடுமோ" என்று பாடிக் கொண்டே பறந்து வந்த கொண்டைக்காகங்கள் இவ்விரண்டையும் பார்த்து, "அடடே சொண்டுக்கிளிகள் இரண்டும் நேரத்துக்கு போவதைப் பார்" என நையாண்டி பண்ணி சிரித்துக் கொண்டன.

"அண்டங்காக்கா மாமிக்கு எப்போதும் நையாண்டி தான்" என பதிலுக்கு சிரித்துக் கொண்டே பறந்தன ஆண்கிளியும் பெண்கிளியும். தோட்டமும் நெருங்கியிருந்தது. ஆண்கிளி றொபேட் தன் துணைவி சலோமியாவிடம்

"அன்பே, நீ இந்த வேப்பமரத்தினில் உட்கார்ந்திரு. நான் சென்று பழங்களை பறித்து வருகின்றேன்" எனக்கூறி தோட்டத்திற்குள் பறந்தது. பெண்கிளியோ வேப்பமரக் கிளை ஒன்றில் அமர்ந்து கொண்டது. வேப்பமரக் காற்று காலை வேளையில் உடலை மெதுவாக வருடிச் செல்லவே தன் இறக்கைகளை அது இதமாகக் கோதிவிட்டுக் கொண்டது.

அவ்வேப்பமரத்தில் ஏற்கனவே மைனாக்கள் இரண்டு அமர்ந்திருந்தன. பெரிய மைனா சின்ன மைனாவின் தலையை செல்லமாக கோதிக் கொண்டே "கிளியாரே இதிலே தனிமையில் ஏன் அமர்ந்திருக்கின்றீர்கள்? உணவு தேடச் செல்லவில்லையா" என்றது.

"இல்லை மைனா அக்கா. அவர் சென்று விட்டார். வரும் வரை நான் இதிலே காத்திருப்பேன்" என்றது.

இதற்கிடையில் கிழக்கு நோக்கிப் பறந்த கிளிக்கூட்டமொன்று சலோமியாக் கிளியைக் கண்டதும் சந்தோசமாக கூச்சலிட்டு கொண்டே பறந்து சென்றது. சலோமியாக் கிளியும் பதிலுக்கு தன் இறக்கைகளை அடித்து மகிழ்ச்சியினை தெரிவித்துக் கொண்டது.

செர்ரிப் பழத் தோட்டத்திற்கு சென்ற ஆண்கிளி றொபேட் விளைந்து கிடந்த செர்ரிப் பழங்களின் அழகிலே மெய்மயங்கிப் போனது. ஆசை தீர அவற்றினை உண்டு விட்டு மனைவிக்கும் கொண்டு செல்ல வேண்டும் என அது எண்ணிக் கொண்டது. ஏராளமான பழங்களை கொத்தி தின்று கொண்டிருந்த ஆண்கிளிக்கு நேரம் போவதோ, தனக்காக மனைவி காத்துக் கொண்டிருப்பதோ நினைவில் இல்லை.

இதேசமயம் வேப்பமரக் கிளையில் அமர்ந்தவாறே தன் துணைவன் வருவான் என தோட்டப்பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்த பெண் கிளியை அச்சமடையச் செய்யும் வகையில் பெரிய பறவைக் கூட்டமொன்று வேகமாகப் பறந்து வருவதனைக் கண்டது. திக்குத் திசை தெரியாது எங்கு செல்வதென அறியாது இறக்கைகளை அடித்துக் கொண்டே "றொபேட் ,றொபேட்" எனக் கத்திக் கொண்டே ஏதோ ஒரு திக்கில் தன்னைக் காத்துக் கொள்வதற்காக அது பறக்கத் தொடங்கியிருந்தது. செர்ரிப் பழங்களை உண்பதில் திளைத்திருந்த ஆண் கிளிக்கு அதன் அலறல் சத்தம் கேட்கவேயில்லை.

திசை தெரியாது பறந்த பெண்கிளி சலோமியா மரங்களடர்ந்த மரத்தின் கிளை ஒன்றில் தன்னை மறைத்துக் கொண்டது. அதன் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பறவைக் கூட்டம் அவ்விடத்தை கடந்து சென்ற பின்னர் சற்று ஆசுவாசமாக மூச்சு விட்டு ஆறுதல்படுத்திக் கொண்ட பெண் கிளி அப்போதுதான் ஒன்றை யோசிக்கத் தொடங்கியிருந்தது. தோட்டத்துக்கோ தனது பொந்திற்கோ திரும்பிச் செல்வதற்கான வழி அதற்குத் தெரியவில்லை. பொழுதும் வேறு இருண்டு கொண்டுவருவதனை அது உணர்ந்து கொண்டது. அச்சம் அதனை மீண்டும் தொற்றிக் கொள்ளவே

"றொபேட் என்னைக் காப்பாற்றுங்கள்" என அரற்றிக் கொண்டே திசை தெரியாது அங்குமிங்கும் பறந்தது.

செர்ரிப் பழங்களினை வயிராற உண்டு பசியாறிய ஆண்கிளி தன் துணைவிக்கும் பழங்களை சேகரித்துக் கொண்டது. பொழுது இருண்டுவிட்டதால் அவசரமாக வேப்பமரத்தடிக்கு வந்து சேர்ந்த அது பெண்கிளியைக் காணாது அதிர்ச்சியடைந்தது. அருகில் எல்லா இடங்களிலும் சலோமியா என் ஆசை துணைவியே எங்கிருக்கிறாய் என அழைத்துப் பார்த்தது. துணைவி அங்கிருப்பதற்கான எவ்வித அறிகுறியும் அதற்கு கிடைக்கவில்லை. பறவைகள் அனைத்தும் கூட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தன. ஒருவேளை பொழுது இருண்டதால் சலோமியாவும் பொந்திற்கு சென்றிருக்க கூடுமென எண்ணிய ஆண்கிளி பொந்து நோக்கிப் பறந்தது.

பொந்து வெறுமையாக இருந்தது. ஆண்கிளியை பதற்றம் தொற்றிக் கொண்டது. அருகிலிருந்த காகத்தின் கூட்டினை நோக்கிப் பறந்து சென்ற ஆண்கிளி நடந்தவற்றை கூறி கலங்கி நின்றது.

"கவலை வேண்டாம் விடிந்ததும் எம் உறவுகள் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறேன். சலோமியா எங்கிருந்தாலும் அவளை கூட்டி வருவோம்"

என ஆறுதல் கூறியது. றொபேட் பொந்துக்குள் செல்லவே இல்லை. இரவு முழுவதும் காகக் கூட்டின் வாசலிலே அழுது கொண்டிருந்தது. தன் துணைவியின் பிரிவைத் தாங்கமுடியாது அரற்றியது. திக்குத் திசை தெரியாத இடத்தில் சுற்றும் முடங்கிய இருளினில் தன் துணைவனை எண்ணி ஏங்கியவாறு கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருந்தது பெண்கிளி சலோமியா. துணைவனுடன் கழித்த பொழுதுகளையும் செர்ரிப் பழங்களை உண்ணும் ஆசையில் தான் அதனை தோட்டத்திற்கு அனுப்பி வைத்ததையும் நினைத்து அதற்கு தோட்டக்காரனால் ஏதும் ஆபத்து வந்திருக்குமோ என எண்ணி மருகியது.

**"அன்பே, நீ இந்த வேப்பமரத்தினில் உட்கார்ந்திரு. நான் சென்று பழங்களை பறித்து வருகின்றேன்" எனக் கூறி தோட்டத்திற்குள் பறந்தது. பெண்கிளியோ வேப்பமரக் கிளை ஒன்றில் அமர்ந்து கொண்டது. வேப்பமரக் காற்று காலை வேளையில் உடலை மெதுவாக வருடிச் செல்லவே தன் இறக்கைகளை அது இதமாகக் கோதி விட்டுக் கொண்டது.**

சஞ்சீவி சிறுகதை

மறுநாள் பொழுதும் விடிந்தது. அண்டங்காக்கா எழுந்து தன் பெரிய குரலால் காகா என கரைந்து தன் உறவுகளுக்கு சலோமியா காணாமற்போன செய்தியை தெரியப்படுத்தியது. சேவலும் அதற்கு உதவியது. சிறிது நேரத்தில் காகம், மைனா, மரங்கொத்தி என அனைத்துப் பறவைகளும் அவ்விடத்தில் கூடின. ஆண்கிளிக்கு ஆறுதல் கூறிவிட்டு பெண்கிளி சலோமியாவை தேடி ஒவ்வொரு திக்காக பறந்து சென்றன. இரவு முழுவதும் தனித்திருந்த பெண்கிளி பயந்து சோர்வடைந்து மயங்கி கீழே விழுந்திருந்தது. கிளியொன்று சுகவீனமுற்று விழுந்திருப்பதனைக் கண்ணுற்ற அக்காட்டிலுள்ள மயிலினங்கள் அதனை தூக்கி எடுத்து நீர் கொடுத்து தம் இறகுகளால் விசிறி விட்டு இதம் கொடுத்து அதனை கண் விழிக்கச் செய்திருந்தன. கண்விழித்த பெண்கிளியோ "றொபேட், றொபேட் " என்று அரற்றிக் கொண்டிருப்பதனைக் கண்ணுற்ற மயில்கள் அதனிடம் நடந்தவற்றைக் கேட்டறிந்தன. உடனடியாக காட்டிலுள்ள கிளிகளுக்கு செய்தி அனுப்பிய மயில்கள் அவற்றை உதவி செய்யுமாறு அன்புடன் அழைத்தன. கிளிகளும் விஷயமறிந்து திக்குத் திக்காக பறந்து சென்றன. எல்லையில்லா வான் பரப்பில் பறவைகள் ஆண்கிளியையும் பெண்கிளியையும் சேர்ப்பதற்காக அன்று முழுதும் அலைந்து அந்தி சாயும் நேரம் இருதரப்பும் சந்தித்துக் கொண்டன. இன்பத்தில் கலகலத்து இறக்கைகளை அடித்துக் கொண்டன. ஆண்கிளியிடம் பெண்கிளியை சேர்த்தன. இரண்டும் அளவளாவி மகிழ்வதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடின. அன்றிரவு கிளியிரண்டும் குடியிருந்த மரப்பொந்தில் உறக்கமென்பதேயில்லை. எல்லாப் பறவைகளும் கூடியிருந்து ஆர்ப்பரித்து கொண்டாடிக் கொண்டிருந்தன. கொண்டைச் சேவலாருக்கும் உறக்கம் வரவில்லை. அடிக்கடி ஒய்யாரமாக கூவிக் கூவி தன் ஆனந்தத்தினையும் வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். கொண்டைச் சேவலாரின் வீட்டு எஜமானியம்மா மட்டும் இந்தப் பறவைகளின் சத்தத்தால் உறக்கம் வராது புரண்டு புரண்டு படுத்தவாறே அவற்றை ஏசிக் கொண்டிருந்தாள். பறவைகளின் பாஷை அவளுக்கும் புரிந்திருந்தால அவளும் அந்தக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்திருப்பாளோ என்னவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாயா ஏஞ்சலோ

## வலிசுமந்த கறுப்புக்கவிதைக்காரி

○ கோகுலராகவன்

மாயா ஏஞ்சலோவின் (Maya Angelou) கவிதைகளைக் கொஞ்சம் தாமதமாகப் படிக்க நேர்ந்ததை இட்டு வருத்தமாக இருக்கிறது.

எவ்வளவு அற்புதமான கவிஞர். எவ்வளவு வலிகள் சுமந்த கவிதைகள்.

அமெரிக்காவில் வாழ்ந்த கறுப்பினப் பெண்.

நிறவேறுபாடு அமெரிக்காவில் உச்சமாக இருந்த காலத்தில் வாழத்தொடங்கி, அதை உடைத்தெறிந்தவர்களில் மாயா ஏஞ்சலோ முக்கியமானவர்.

எட்டு, வயதில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியபோது அந்த மனிதனைத் திட்டுகிறார்.

அவன் மூன்று நாளில் இறந்தபோது ஏஞ்சலோ திடுக்கிட்டுப் போய்.

“என் குரல் ஒருவனைக் கொல்லும் என்றால் இனிமேல் நான் பேசமாட்டேன்” என்று சில காலம் பேசாமல் இருந்தார்.

17 வயதில் கவிஞராக அவதாரம் எடுத்தார்.

தன் கவிதைகள் மூலம் சம உரிமைப் போராட்டத்தை நடத்தினார்.

இதற்காக மாட்டின் லூதரை பின்பற்றினார்.

காலம் மாறுகிறது.

1993 இல் பில் கிளின்டன் பதவி ஏற்றபோது கவிதை பாட அழைக்கப்பட்டார் என்பதே அவரது பணிகளுக்கும் சாதனைகளுக்கும் ஆதாரம். பட்டம் பெறாத போதும் உலகில் பல பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக கடமையாற்ற அழைக்கப்பட்டவர் மாயா ஏஞ்சலோ.

அவரது “ நான் எழுவேன்”(I rise), என்ற கவிதையை தமிழில் தருகிறேன்.

கொஞ்சம் நீண்ட கவிதை பொறுமையாகப் படியுங்கள். நான் பொறுமையாகத்தான் மொழி மாற்றம் செய்தேன்.

### நான் எழுவேன்

நீங்கள்
திரிக்கப்பட்ட கசப்பான பொய்களால்

என் வரலாற்றை தாழ்த்தி எழுதலாம்.
சகதிகளில் போட்டு என்னை மிதிக்கலாம்.
ஆனால் நான் ஒரு தூசி போல மேல் எழுவேன்.

என் அறிவு உன்னை மழுங்கடிக்கிறதா?
என்னால் நீ ஏன் சங்கடம் கொள்கிறாய்?
என் படுக்கை அறையில்

எண்ணெய்க் கிணறு ஊற்றெடுப்பது போல.
ஒரு சூரியன்
ஒரு சந்திரன்
ஒரு அழகிய நீர்ச்சுனை
இவை போல நான் மேலே எழுவேன்.

நான் அழிந்து போவதையும்
ஒடுங்கி நடப்பதையும்
என் தோள் குறுகுவதையும்
காண விரும்புகிறாயோ?

என் பெருமைகள் உன்னைத் தடுமாற வைக்கிறதா?
நீ பயம் கொள்ளத் தேவையில்லை.
ஏனெனில்
என் வீட்டின் பின் புறம்
தங்கச் சுரங்கங்கள் இல்லை.

உன் வார்த்தைகளால் சுடு
உன் கடும் பார்வையால் வெட்டு
உன் வெறுப்பால் கொல்
ஆனால் நான் எழுவேன்.

என் அழகு உனக்கு அதிர்ச்சி அளிக்கிறதா?
பயப்படாதே
என் கால்களுக்கிடையில்
வைரங்கள் இல்லை.

குடிசையில் வாழ்ந்தவள்தான்.
ஆனால் எழுவேன்.
கடந்த காலம் வலி மிகுந்ததாக
இருந்தாலும்கூட எழுவேன்.

நான் கருங்கடல்.
பரவிப் பாய்வேன்.
உருண்டு திரண்ட அலைகளால்
மோதுவேன்.

என்னைப் பயமுறுத்தினாலும்
மிரட்டினாலும்
இந்த நாள் முடியும்போது

அழகாக எழுவேன்.
என் மூதாதையர் தந்த

பெரிய பரிசுகளோடு வருவேன்.
எல்லாம் மாறும்.
நான் எழுவேன்.
நான் எழுவேன்.
நான் எழுவேன்.









○ இராகவன்

பாகம் 2

ஊர்ப்புதினம் நாற்பத்தோராவது அத்தியாயத்தில எங்கட பாலண்ணையை பற்றி எழுதியிருந்தனான். இந்தக்கிழமை அவருக்கு நேர் இளையவர் சிவமண்ணையைப்பற்றிக் கொஞ்சம் சொல்லோணும். அம்மாவை அவரைச் ‘சிவம்’ எண்டு சொல்லுவினம். அண்ணாக்களும் நானும் சிவமண்ணை எண்டு சொல்லுவம். இவையளின்ரை பிறந்த வீடு கண்ணாடி வள்ளிப்பிள்ளையக்கை எண்டு நான் ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில எழுதியிருந்த எங்கட பேராசிரியர் சிவலிங்கராஜாவின்ர தாய்வீட்டுக்கு நேரை முன்னாலயிருக்குது. சிவமண்ணையின்ர முழுப்பெயர் சிவசுப்பிரமணியம். ஆள் சித்தவைத்தியத்தில வலுவிண்ணன். இப்ப விசுவமடுவில இருந்துகொண்டு ‘வாணி சித்த ஆயுள்வேத வைத்திய நிலையம் ’ எண்டபெயரில ஒரு மெடிக்கல் கிளினிக் வைச்சு நடத்திறார். இவரின்ர மனிசிக்காரி அருந்ததி






யக்காவும் ஒரு சித்த வைத்தியர்தான். இவையளுக்கு பிரணவப்பிரியா, சரவணப்பிரியா எண்டு இரண்டு பொம்பிளைப் பிள்ளையள். கடைசிக் கட்ட சண்டை நடக்கேக்குள்ள சிவமண்ணை விசுவமடுவிலயிருந்து கொண்டு ஆங்கில மருந்துகளுக்கு பெருந்தட்டுப்பாடு இருக்கேக்குள்ள, அவதிப்பட்ட சனங்களுக்கு மூலிகை வைத்தியம் செய்து அளப்பெரும் சேவையாற்றியிருக்கிறார். இதையெல்லாம் பாராட்டித் தேசிய சமாதானச் சங்கம் ‘ கீர்த்திஸ்ரீ தேசபந்து ’ எண்ட பட்டத்தையும், வட இலங்கை சுதேச வைத்தியசபை ‘ சுதேச வைத்தியதிலகம்’ எண்ட பட்டத்தையும் வழங்கி கௌரவிச்சவை. மகிழ்ச்சி தரும் செய்தி.

போன சனிக்கிழமை மத்தியானம் அம்பன் கமநலசேவை நிலையத்தில விவசாயப்போதனாசிரியராக வேலை செய்யிற எங்கட அயலைச் சேர்ந்த சிவராமன் எனக்கு கோலெடுத்து ‘அண்ணை எங்கை நிக்கிறியள் ?உங்களைச் சந்திக்கிறதுக்கொண்டு பாலசுப்பிரமணியம் எண்டவரின்ட தம்பி சிவசுப்பிரமணியம் வந்து நிக்கிறார். கூட்டிக்கொண்டு வரட்டோ? ’ எண்டு கேட்டார். “ஓமோம் கூட்டியாங்கோ?” எண்டு சொல்லிப்போட்டு நானும் வெளிக்கிட்டு கனகராவளவுப் பிள்ளையாரடிக்குப் போனன். அதுக்கிடையில சிவராமன் மோட்டச்சைக்கிள்ள சிவமண்ணையோட வந்து சேந்திட்டார்.

47

சிவமண்ணை இறங்கி, “தம்பி நான் ஞாயிற்றுக்கிழமை உதயன் பேப்பரை வாங்கின உடனை முதல்ல வாசிக்கிறது உம்மட ஊர்ப்புதினம் தான். வாசிக்க வாசிக்க ஒரே சந்தோசமாயிருக்கும். இதுவரை வந்த ஊர்ப்புதினம் எல்லாம் வெட்டி ஒட்டி பைண்ட் பண்ணி வச்சிருக்கிறன்” எண்டுட்டுத் தன்ர ஹான்ட் ஃபாக்கைத்திறந்து முதல்ல ஒரு பெரிய சொக்கிலேற் கிறீம் பிஸ்கற்றை எடுத்து தந்து “இந்தாரும் இது உம்மடை செல்லமகளுக்கு” எண்டார். பிறகு, தான் எழுதி வெளியிட்ட“மருந்தில்லா மருத்துவம்” எண்ட புத்தகத்தையும் தன்ரை கையெழுத்தைப் போட்டு அன்பளிப்பாத் தந்தார். அந்த புத்தகத்தைத் தான் இப்ப வாசிச்சுக் கொண்டிருக்கிறன். பின்னட்டைக் குறிப்பை எங்கடை பேராசிரியர் சிவலிங்கராஜாதான் எழுதியிருக்கிறார். உண்மையில மூலிகை வைத்தியம் தொடர்பாகத் தமிழில வந்திருக்கிற ஒரு முக்கியமான புத்தகம். அதுபோக ஒரு சோகத்தையும் எனக்கு சொன்னார்.” தம்பி உவன் துரைசிங்கத்துக்கு ‘எடேய் உங்களைப் பற்றியெல்லாம் ஊர்ப்புதினத்தில எழுதியிருக்கடா’ எண்டு ஒருநாள் சொன்னாப்போல ‘அதையொருக்கால் வாசிக்க வேணும் தாங்கோ’ எண்டு கேட்டவன். நானும் ‘வீட்டை வா தாறன்’ எண்டு சொன்னன். அதுக்கிடையில் நான் மகளைப்பாக்க யூ.கே.க்குப் போகிட்டன். அந்த இடையில அவன் வீட்டை வந்திருக்கிறான். நானில்லை திரும்பி போகிட்டான். நான் யூ.கேயால திரும்பிவரேக்குள்ள பாத்தால் அவன் பாவி திடீரெண்டு செத்திட்டான்’ எண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காளான் வளர்ப்பு ஒரு பார்வை

சுஜாவந்தி திருவேந்தன்

உலக நாடுகளில் சனத்தொகைப்பெருக்கத்துடன், அதிகரித்த உணவுக்கான கேள்வி பெரும் இடர்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறது. அதிகரித்து வரும் உணவுக்கான தேவையை நிவர்த்தி செய்ய பயிர்செய்கைக்கான இடவசதி போதுமானதாக இல்லை என்பதே தாற்பரியமான உண்மை. அத்துடன் தற்போது காலநிலை மாற்றம் ஒரு பெரிய நெருக்கடியாக உள்ளது. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத சுற்றாடலில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு பற்றி யோசிக்கமுடியாது. இவ்வாறான சூழலில் ஊட்டசத்துக் குறைபாட்டுடன் சேர்ந்த பல நோய் நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளன. இச்சூழ்நிலை வரக்கூடாதாயின் மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வாறு கண்டறியப்பட்ட சிறந்த வழிகளில் ஒன்று தான் ஊட்டசத்து மற்றும் மருத்துவ குணம் கொண்ட காளான் செய்கை. இதற்காக பெரியளவு இடவசதியோ, அதிக விலை உள்ள மூலப்பொருள் தேவையோ இல்லை. வீட்டு மற்றும் விவசாயக் கழிவுகளை கொண்டு பெறுமதி மிக்க காளான்களை உற்பத்தி செய்யமுடியும்.

காளான் என்பது வெற்றுக் கண்ணுக்குப் புலப்படக்கூடியதும், பச்சைத்தாவரங்கள் போன்று குளோரோபில் எனப்படும் பச்சையம் நிறப்பொருள் இல்லாத பூஞ்சணமாகும். எமது உடலின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் மற்றும் உடற்கலங்களை புதுப்பிப்பதற்காகவும் தேவையான புரதம் காளான்களில் அதிக அளவில் ஏறக்குறைய 12-35 சதவீதம் உள்ளது. இந்த வீதம் காளான் இனத்திற்கு ஏற்ப வேறுபடும். காளானில் உள்ள புரதம், விலங்குப் புரதத்துக்கு ஈடானது. காளான்களைப் பொறுத்த வரை ஒரு தண்டுப் பகுதியும், குடை போன்ற தலைப் பகுதியும் இருக்கும். தலைப் பாகத்தின் கீழ்ப் பகுதியில் அறைகள் போன்ற படை படையான அமைப்புகளைக் காணலாம். படை அமைப்பினை ஆயிரக்கணக்கான நுண்ணிய பூஞ்சண வித்திகள் ஆக்கிரமித்திருக்கும். இவை மேலும் பல புதிய காளான்களை உருவாக்குகின்றன.


இலங்கை கிராமப்புற மக்களின் சனத்தொகையில் 70%க்கும் மேற்பட்டோரின் பிரதான வருமானம் விவசாயத்திலிருந்தே கிடைக்கிறது. அதிலும் 7.0% மொத்த உள்நாட்டு உற்பத்தி விவசாயத்தின் மூலமாகவே வருகிறது (இலங்கை மத்திய வங்கி, 2019). பொதுவாக விவசாயம் மூலம் கிடைக்கும் வருமானம் என்பது அறுவடையின் பின்னைய நாள்களில் கிடைப்பதே. இடைப்பட்ட நாள்களில் வருமானமீட்ட காளான் செய்கை ஒரு நல்ல உத்தி. எமது தேவைக்கு ஏற்ப நாம் வருடம் பூராகவும் காளான் செய்கையை மேற்கொள்ளமுடியும்.

இதற்காக இலங்கைக்கு நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) இன் உதவியுடன் 1985 இல் காளான் செய்கைக்கான தாய்க்காளான் வித்து உற்பத்திக்கான ஆய்வுகூடம் நிறுவப்பட்டு முதலில் தாய்க்காளான் வித்து, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் உற்பத்திசெய்யப்பட்டது. தற்போது அதிகரித்து வரும் உயர் சந்தைத் தேவை ,காளான் செய்கையை இன்னும் ஊக்குவிக்கிறது. இன்றைய காலகட்டத்தில் காளான் செய்கை வளர்ந்துவரும் முதலீட்டுத் தொழிலாக மாறிக் கொண்டு வருவதால் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் காளான் செய்கையாளர்களை ஊக்குவிக்க பல முயற்சிகளை மேற்கொள்கின்றன.

### காளான் வளர்ப்பின் முக்கியத்துவம் என்ன?

- காளானில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளான அதிக புரதம், நார்ச்சத்து என்பன உள்ளன. இத்தோடு விட்டமின்கள் மற்றும் கனியுப்புகளான கல்சியம், பொசுபரசு, பொட்டாசியமும் உண்டு.
- இது கூடிய அளவில் புரதத்தைக் கொண்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட தினசரி புரதச்சத்து உள்ளெடுக்கும் அளவுப்படி 5% போதுமானது. காளான்களைப் பொறுத்தவரை உதாரணமாக 100கிராம் ஈனோகி எனும் காளானில் 2.66 கிராம் புரதம் உள்ளது.
- உடலில் தேங்கும் கெட்ட கொழுப்பைக் குறைக்கிறது. புற்றுநோய், குருதிச்சோகை, எலும்புப்புரை போன்ற நோய் நிலைமைகளில் இருந்து பாதுகாக்கிறது.
- உடலில் இன்சுலின் அளவைச் சீராக்குகிறது.
- நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கிறது.
- நகம் மற்றும் பல் ஆரோக்கியத்துக்கு உதவுகிறது.
- விவசாயக் கழிவுகளை கீழ்ப்படையாக பயன்படுத்துவதால் செலவு குறைந்த அதிக வருமானமீட்டும் தொழிலாக இருக்கிறது.
- பயன்படுத்தப்பட்ட காளான் கீழ்ப்படையை மண்புழு உரம் தயாரிக்கப் பயன்படுத்தலாம்.
- இது நிலமற்ற சிறிய விவசாயிகளுக்கு ஏற்றது மற்றும் சுய தொழில் வாய்ப்பாகவும் அமைகிறது.

இயற்கையில் காளான்கள் பல்வண்ண நிறங்களிலும், வெவ்வேறு வடிவங்களிலும் உள்ளன. ஆயினும் அன்றாடம் நாம் காணும் எல்லாக் காளான்களையும் உணவு மற்றும் மருத்துவத் தேவைக்காக பயன்படுத்தமுடியாது. ஏனெனில் சில காளான்கள் நச்சுத்தன்மையானவை. 2000 வகையான காளான்களில் 22 வகையான காளான்களையே நுகர முடியும். பொதுவாக எம்மிடையே காணப்படும் , கண்கவரும் நிறமுடைய காளான்கள் நச்சுத்தன்மையானவை என்றும் வெண்மை நிறக் காளான்கள் உண்ணக்கூடியவையும் என்ற கருத்து தவறானது. இன்னும் சொல்லப்போனால் மருத்துவக் குணம் கொண்ட ரோர் கிரெயில் காளான் நிறமுடையது. அதேவேளை வெண்ணிற பிளிரோட்டிஸ் ஒலியோரியஸ் காளான் நச்சுத்தன்மையானது. சில காளான்கள் அல்ககோல் மற்றும் சிலவகையான மருந்துகளுடன் உள்ளெடுக்கும் போது நச்சுத்தன்மையானவை. ஆனால் இன்னும் சில காளான்களின் நச்சுத்தன்மைக்கு காரணமான நஞ்சு ,சமைக்கும் போது அழிந்து விடவும் வாய்ப்புண்டு. எனினும் சில சந்தர்ப்பங்களில் நச்சுத்தன்மையான காளான்களையும், சமைக்கும் காளான்களையும் வேறுபடுத்த முடியாதுள்ளது.




### நஞ்சுக்காளான்கள்

பொதுவாக நஞ்சுக்காளானின் தலைப் பகுதியில் மருக்கள் மற்றும் செதில்கள் இருக்கும், பச்சைச் செதில்கள் மற்றும் இளஞ்சிவப்பு கலந்த பச்சைநிற நுண்ணிய பூஞ்சண வித்திகள் காணலாம். பெரும்பாலும் தண்டு சுற்றி மோதிர வடிவ கட்டமைப்பு இருக்கும். விரும்பத்தகாத மணம், பால் போன்ற திரவம் காளானின் காயப்பட்ட பகுதியில் இருந்து வெளியேறும். நச்சுத்தன்மையான காளான்களை உட்கொள்ளுவோமேயானால் ஹலூஸினோஜிக் விளைவுகளான சித்தப்பிரமை, வீக்கமாக சுவாசித்தல், பதற்றம், குமட்டல் மற்றும் மாய அனுபவங்களை உருவாக்கும். எனவே காளான்களைத் தெரிவு செய்யும் போது மிகுந்த கவனம் தேவை. பொதுவாக மொட்டுக் காளான், சிப்பிக் காளான், அரிசிக் காளான் மற்றும் பால் காளான் என்பன பரவலான உணவுக்காக பயன்பாட்டில் உள்ள காளான்கள் ஆகும்.

### தாய்க்காளான் உற்பத்தி

அந்த வகையில் குடை போன்ற தலை கொண்ட காளான்களை உருவாக்க உதவும் தாய்க் காளான் வித்து உற்பத்தி பற்றி இங்கு பார்ப்போம் ? காளான் பூஞ்சண நுண்வித்திகள் சாதகமான சூழலில் முளைத்து பூஞ்சண இழைகளை உருவாக்கும். இந்த இழைகளின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் தேவையான ஊட்டச்சத்து வழங்கும் ஊடகமாக தாய்க் காளான் வித்துகள் தொழிற்படுகின்றன.

### தாய்க்காளான் வித்து உற்பத்திப்படிமுறை

1. நல்ல தரம் வாய்ந்த, நோய்ப் பீடைத் தாக்கமற்ற நெல் (சம்பா) தெரிவு செய்தல்.
2. தேர்வு செய்யப்பட்ட நெல்லினை நன்கு தண்ணீரில் அலசி ஊறவிடுவதன் மூலம் நெல்லில் காணப்படும் தேவையற்ற கழிவுகள், சப்பி நெல், சேதமடைந்த நெல்மணிகளை அகற்றமுடியும்.
3. நெல்மணிகளை மென்மையாக்குவதற்காக ஏறக்குறைய 30 நிமிடம் வரையில் நெல்லினை வேகவைத்தல், ஒன்றிரண்டு நெற்கள் வெடிக்க ஆரம்பிக்கும் போது வேக வைப்பதை நிறுத்திவிடவேண்டும் (ஏனெனில் நெல் அரை வேக்காடாக வேக வேண்டும். அதிகம் அவிந்த நெல் குழைந்து போகும், பிற்பட்ட காலத்தில் அதிலிருந்து துர்நாற்றம் வீசும்).
4. பின்னர் மேலதிக நீரை வடித்து அகற்றுதல்.
5. வடித்தவுடன் மென்மையாக்கப்பட்ட நெல்மணிகளை சாக்குப்பையில் நன்கு பரப்பி விடுவதன் மூலம் எஞ்சிய ஈரத்தன்மையை அகற்றலாம்.
6. ஈரத்தன்மையை முற்றாக உறிஞ்சி எடுக்கவும், அமிலத்தன்மை (pH) அளவைச் சீராக்கவும் உலர்நிறையில் 1கிலோ நெல்லுக்கு 20கிராம் கல்சியம் காபனேட் துகளை அரை வேக்காடாக நெல்லுடன் கலந்து சிறிது நேரம் சாக்குப்பையில் விடல். வேக வைத்த நெற்களைக் கையில் எடுத்துப் பார்க்கும் போது தனித்தனி மணிகளாக இருக்க வேண்டும்.
7. கல்சியம் காபனேட் கலந்த நெல்மணிகளை பொலிபொரோப்பின் பைகளில் 75கிராம் அளவில் அல்லது தொற்று நீக்கம் செய்யப்பட்ட போத்தல்களில் நிரப்பி வாய்ப்பாகத்தை பஞ்சினால் மூடி, காகிதத்துண்டினால் பஞ்சை மூடி கயிறு கொண்டு கட்டி விடல்.
8. இப்பைகள் அல்லது போத்தல்களை அழுத்த வெப்பமூட்டியில் (Autoclave) வைத்து 20 இறாத்தல் நீராவி அழுத்தத்தில் 1210C வெப்பநிலையில் 15 நிமிடம் தொற்று நீக்கம் செய்தல். இச்செயன்முறைக்காக ஏறக்குறைய 2 மணி நேரம் வரை எடுக்கும்.
9. சூடு ஆறவிட்ட போத்தல்கள் /பைகளின் பஞ்சை கவனமாக அகற்றி கிருமி நீக்கம் செய்யப்பட்ட கம்பியினால் காளான் தூய பூஞ்சண இழையை உட்செலுத்தி விட்டு அதே பஞ்சால் மறுபடியும் போத்தல்கள் /பைகளின்; வாய்ப்பகுதியை மூடிவிடல்.
10. மேற்கூறப்பட்ட எல்லாச் செயற்பாடுகளும் தொற்று நீக்கம் செய்யப்பட்ட நிபந்தனையின் கீழ் மேற்கொள்ள வேண்டும்.
11. ஏறக்குறைய 10 நாள்களில் பூஞ்சண இழை முற்றாக போத்தல்கள் /பைகளின் முழுப் பாகத்தையும் ஆக்கிரமித்து வளர்ந்து இருக்கும்.
12. இதுவே தாய்க்காளான் வித்து. இத்தாய்க்காளான் வித்துகளை நாம் காளான் படுக்கை தயாரிக்கப் பயன்படுத்த முடியும்.

இப்போது நம்மிடம் தாய்க்காளான் வித்துகள் இருக்கின்றன. இனி என்ன வைக்கோல் படுக்கையில் காளான் செய்வோமா?

### காளான் படுக்கை தயாரிப்பு

1. சுத்தமான வைக்கோலை எடுத்து சுமார் 5யள நீளமான சிறிய துண்டுகளாக வெட்டி 4-5 மணி நேரம் தூய நீரில் அமிழ்த்தி ஊற விடுவதால் வைக்கோலில் உள்ள தேவையற்ற கழிவுகளை அகற்றமுடியும்.
2. பின்னர் வைக்கோலை சுடுநீரில் 2 மணி நேரம் மூடி கிருமி நீக்கம் செய்தல்.
3. தொற்று நீக்கம் செய்யப்பட்ட வைக்கோலை நன்றாக பிழிந்து முற்றாக ஈரம் போக நிழல் உள்ள சமதரையான இடத்தில் உலர விடல்.
4. 50 cm நீளமான பொலித்தீன் பைகளின் ஒரு முனையை சிறிய நூல் அல்லது ரப்பர் பேண்ட் கொண்டு கட்டி விடல். பின்னர் பையை உள்வளமாக திருப்பி விடலாம்.
5. உலர்ந்த வைக்கோலை 5cm உயரமான படுக்கையாக பையில் அடுக்குதல்.
6. முதல் படுக்கையின் ஓரத்தை சுற்றி தாய்க் காளான் விதைகளை தூவி விடுதல். பின்னர் மீண்டும் 5cm உயரமான வைக்கோல் படுக்கை, பின்னர் காளான் விதைகள் என்ற ஒழுங்கில் 4-5 அடுக்குகளாக்குதல்.
7. அடுக்குகளை நன்றாக கைகளால் அழுத்தி விடல் வேண்டும்.
8. அழுத்தி விட்டு பின்னர் பையின் மற்றய முனையை சிறிய நூல் கொண்டு கட்டி விடவேண்டும்.
9. சிறந்த வளியூட்டத்தை ஏற்படுத்த பைகளில் சிறிய துவாரங்கள் இடல்.
10. இதன் பின்பு விதைகள் விரைவாக வளர இருண்ட அறையில் 85-90% ஈரப்பதன் இருக்குமாறு பைகளை தொங்க விடலாம். ஈரப்பதனை பேணுவதற்காக தேவையேற்படும் போது நீர் சிவிற முடியும்.
11. ஏதும் மாசுக்கள் அல்லது நோய்ப் பீடைத் தாக்கம் உள்ளதா என்று இடை இடையே பைகளைக் கண்காணிக்க வேண்டும்.

வித்துகள் இடப்பட்டதில் இருந்து ஏறக்குறைய ஒரு வாரகாலத்தில் காளான் மொட்டுகள் தோன்றும். ஏறத்தாழ 5-6 நாள்கள் இடைவெளியில் காளான் மொட்டுகளாக அறுவடை செய்ய முடியும். நாள்கள் செல்லச் செல்ல காளானின் நார்த்தன்மை அதிகரிக்கும். இந்தக்கால இடைவெளிகள் காளானின் வகைக்கு ஏற்ப வேறுபடும். இப்போது நமக்கு விளங்கி இருக்கும் காளான் செய்கை எவ்வளவு இலகுகரமானது என்று. குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற நமது வீடுகளில் காளான் உற்பத்தி செய்வோம்.

இன்று காளான் செய்கை வளர்ந்து வரும் உற்பத்தியாக இருக்கிறது என்பது கண்கூடாகத் தெரிகிறது. அதற்கு காரணம் மக்களிடையே காளானுக்கான கேள்வி அதிகரித்ததுடன் அதன் முக்கியத்துவத்தையும் அறிந்ததே ஆகும். எம்மிடம் காளான் செய்கைக்கான தாய்க் காளான் வித்து இருந்தால் நாமும் வீடுகளில் காளான் உற்பத்தி செய்து அன்றாட உணவில் புரதத் தேவையை நிவர்த்தி செய்யமுடியும். வியாபார நோக்கில் குறைந்த செலவில் ஆண்டுதோறும் அதிக வருமானமீட்டவும் முடியும். ஆகவே தாவர விரும்பிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான காளான் இருக்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org